
எங்கள்

# முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்



ரூபா 20/-

பிப்ரவரி 2021

இதழ் 2

# பிறின்சஸ்

## தோல் பொருள் உற்பத்தி



0772684328

மூர்த்தி வளவு தெல்லிப்பளை, செல்வபுரம்.




மொத்தமாகவும் சில்லறையாகவும்
விரும்பிய வடிவில்
விரும்பிய வண்ணங்களில்
செய்து கொடுக்கப்படும்



நம்பமுடியாத
விலைக்கழிவுடன்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளலாம்



தோய்த்துத் துவைப்பதற்கே இத்தனை செலவா?

கவலையை விடுங்கள் **அழுக்கு நீங்கவும்**

**வாசனை** தரவும் குறைந்த செலவில்

நிறைவான சலவைக் கரைசல்

**உடைகளின் நீடித்த பாவனைக்கு உத்தரவாதம்**

எங்கள்

# முற்றம்

Engal Muttam

**ஆசிரியர் : அழ. பகீரதன்**

மாதம் ஒரு குறள்

அறத்துப் பால்- அதிகாரம்: குறள் 041

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை


ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளரின் கற்பனையே.
ஆக்கங்களை சுருக்கவும் மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு.
ஆக்கங்களின் கருத்துகள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துகள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான 'மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை' பொறுப்பாகாது.

**வடிவமைப்பு:**
எஸ். ரி. அனுஜன், சிவபரதன்
**விளம்பர சேகரிப்பு, விநியோகம்:**
புத்தகப் பண்பாட்டுப் பேரவைக்காக
அருந்தவராசா ஹிரித்யா
கு. ஸாரங்கன்,
ச. சசீலன்
**வெளியீடு:**
மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை
Marumalarchchi Mantram Trust
காலையடி, பண்டத்தரிப்பு, இலங்கை
Kalaiyady, Pandatheruppu


நாம் 'எங்கள் முற்றம்' இதழினை மாதந் தோறும் வெளியிடும் அரியமுயற்சியில் உங்களுடன் பேசுகின்றோம்.

எங்கள் முற்றம் முதலாவது இதழுக்கு நீங்கள் அளித்த வரவேற்பு எமக்கு உற்சாகம் தருவதாக இருக்கின்றது.

வீடுதோறும் மறுமலர்ச்சி மன்ற சிறுவர்கள் சென்று விநியோகித்தும் அலுவலகங்கள், கடைத்தெருக்கள், வீடுகள், வைபவங்கள் என்று பல இடங்களிலும் சென்று புத்தகப் பண்பாட்டு பேரவைக்காக சசீலன் தலைமையில் சென்று விநியோகித்தும் தந்த ஒத்துழைப்பு எம்மை இன்னும் உற்சாகப்படுத்துகின்றது.

இதழை நண்பர்கள், வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திய கலைமுகம், அறிந்திரன், தாயகம், ஜீவநதி, எங்கட புத்தகம் ஆசிரிய பீடங்களுக்கும் மற்றும் எழுத்தாள நண்பர்களுக்கும் நன்றிகள்.

அடுத்த இதழுக்கான ஆக்கங்களுக்கு நாம் வாசகர்களாகிய உங்களையே நாடி நிற்கிறோம்.

தொடர்ந்து எழுதுங்கள். விமர்சியுங்கள்.


முகவரி :
ஆசிரியர்,
எங்கள் முற்றம்,
மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு.
marumalarchy1972@gmail.com
T.P +94 771041945



**Proprietor : K.C JUDE**



**C.L பல் - மூக்கு கண்ணாடியகம்**

**இலவசமாக கணினி மூலம் கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும்.**
**முதற் தர Blue Cut Lenses வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம் .**
**பாடசாலை மாணவர்களுக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் விசேடசலுகை வழங்கப்படும் .**



**இல. 58 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.**

**0776176737 0212228893**

# உழைக்கும் மக்களுக்கு வழிகாட்டும் சில்லையூர் செல்வராசன் கவிதைகள்




அழ. பகீரதன்

எல்லாக் காலத்திலும் உழைக்கும் மக்கள் நிலையில் ஏற்றம் இல்லையெனிலும் '1960களும் 70களும் பொற்காலம்... பொற்காலம் எம்மைக் கடந்து சென்றுவிட்டது' என்று சொல்லுகின்ற அந்தக் காலத்து இளைஞர்களை நான் சந்தித்திருக்கின்றேன். அவ்வாறான காலத்தில் கொடிகட்டிப்பறந்த கவிஞர்களுள் ஒருவர் தான் சில்லையூர் செல்வராசன். எனது ஊரிற்கருகில் அமைந்த சில்லாலையில் அவர் பிறந்ததையிட்டு சிறுவயதில் எனக்குள் பெருமிதம்.

'தணியாத தாகம்' என்ற வானொலித் தொடர் மூலம் அறிமுகமான அவரது நாடகத் திறத்தை அறிந்திருந்தாலும் அவரது கவிதையினை சில்லாலைக்கு மேற்கே அமைந்த சாந்தைக் கிராமத்தில் கடற்றொழில் உழைப்பாளி ஒருவரது வாய்மொழியாய் கேட்டபோதுதான் அவரது கவி வீச்சினையும் நிகழ்கால ஓட்டத்தில் அவரது கவிதை சாதாரண மனிதரின் மொழியில் அமைந்த திறத்தையும் கண்டு வியந்தேன். மரபோசை பிசகாது கவி புனையும் பாங்கே அவரது கவித்துவம். மாக்சிசத்தின் பால் அவரது ஈர்ப்பு மக்கள் இலக்கிய மார்க்கத்தை அவருக்கு காட்டிநின்றது.

பேச்சோசையும் அங்கதமும் வாய்ந்த அவரது கவிதைகள் கவியரங்கில் பார்வையாளரைக் கட்டிப்போட்டதில் வியப்பில்லை. தான்தோன்றிக் கவிராயர் எனத் தனக்குள் இன்னொருவரைக் கண்டவர். பல்கலைவேந்தராய் வட்டமிட்டவர்.

உழைக்கும் மக்கள் குரலாக ஒலித்த அவரது கவிதைகள் 'சில்லையூர் செல்வராசன் கவிதைகள்' என்ற தொகுப்பாக அவரின் மறைவின் பின் வெளிவந்தது.

பொதுவுடமைத் தத்துவத்தை வரித்துக்கொண்ட அவர் 'மணியத்திற்கு எந்தன் மாக்சீய வந்தனங்கள்' என்ற கவியரங்கக் கவிதையில்,

...படிப்பைப் பொதுமைப் படுத்த நடந்த சமர்
ஊர்வலங்களில் முன் நின்று உழைக்கின்ற வர்க்கத்தார்
யுத்தங்களில் உழைப்பைத் தத்தம் செய்தான், சாதிச்
சண்டைகளில் தாழ்ந்த சமூகங்களுக்காகத்
தோள் கொடுத்து, நலியும் தொழிலாளருக்கான
சங்கங்களின் உட் தத்துவப் பிரிவினைகள்
தோன்றிய போதெல்லாம் சுடராய் வழி நடத்தி,
இனக் கலவரங்களிலே இதயத்தால் பிசகாமல்,
அறிவாற் பிரச்சினைகள் அனைத்தும் இனங்கண்டு,
கரியாய் இயங்கி, கடைசி வரை போராட்டப்
பண்பு குன்றாமல், பரித்தியாகன் என்ற
சொல்லுக்கு இலக்கணனாய்ச் சுடர்ந்த என் அவனான்
தோழமையின் உரு கே. ஏ. சுப்பிரமணியன் என்ற
ஆளுமை மிகும் பொதுமை அரசனுக்கு நண்பன் நான்

எனத் தன் நண்பர் கே. ஏ. சுப்பிரமணியம் இனக்கலவரங்களின்போதும் உணர்வுக்கு ஆட்பட்டு நிலைமாறாது அறிவார்ந்து சிந்தித்து பிரச்சனையினை நோக்கி நின்றமையை எடுத்துரைக்கின்றார்.

1983 ஆடிக் கலவரத்தை அடியொற்றி இயற்றிய 'சிலுவையிற் அறையுண்ட நிலா' என்ற நெடும்பாவில் கலவரத்தின் கருப்பொருளைப் பாடிச் செல்வார்:

பிறகு தான் புரிந்து கொண்டான்,
  பெரு நெருப் பொன்றை மூட்டி
விறகினில், இனக் குரோத
  வெந்தழல் எரியச் செய்தோர்—
சிறகுகள் விரித்துப் பேதச்
  சினத்தினை விசிறினோர்கள்—
புறவினை புரிந்தோர் — உள்ளும்
  புறமுமே உள்ளார் என்று!

உள்ளொன்று புறமொன்றாக
  உலவிடும் கீழ்மைப் புத்திக்
கள்ளர்கள், மொழி, மதத்தை,
  சாதியை, இனத்தைச் சுட்டிக்
குள்ளமாய் தங்கள் வர்க்கக்
  கோன்மையைப் பேணத் தோண்டும்
பள்ளத்தில் வீழும் பேதைப்
  பரம்பரைத் தொடர் ஈதென்று!

என உழைக்கும் மக்களைச் சுரண்டும் வர்க்கம் அடிமைப்படுத்த இனமோதலினை ஏற்படுத்தும் சூழ்ச்சியில் நாம் மாய்வதைப் புரிந்து நமக்கும் புலப்படுத்தினார்.

'காசப்பர் காதை' என்ற பண் இடையிட்ட நடைச் சித்திரத்தில் தன்நோக்கை விரிக்கின்றார்.

பலர் வாடச் சிலர் மாடம் கட்டிக்
கொண்டு பவி செல்லாம் சுகிக்கின்ற பழைய போக்கை
இலதாகச் செய்தாலே உலகம் வாழும்;
இது செய்வதெளிதல்ல; எனினும் மார்க்கம்
சிலதேனும் இது காலை செய்ய முன்னிச்
செயற்பட நாம் தொடங்குகிறோம்; ஏழைமக்கள்
நிலைபேறு வருவதற்காம் குறிகள் கண்டு
நிமிர்கின்றார்....

மேலும் அவர் 'நாளைய தமிழருக்கு' என்ற கவிதையில்,

சாதியை ஒழித்து விட்டார்;
சமத்துவம் கண்டு விட்டார்:
சூதியல் வேத மூடச்
சூழ்ச்சிகள் தொலைத்து விட்டார்;
மாதினை ஆணுக் கென்னும்
மகத்துவம் கண்டு விட்டார்:
நாதியற் றுழல்வோர் இல்லா
நன்னிலை எய்தி விட்டார்!

ஒருவர் யாவர்க்கும் என்றும்,
யாவரும் ஒருவர்க் கென்றும்,
திருவெலாம் பொதுச் சொத்தென்றும்,
தேசமும் மொழியும் கூடப்
பிரிவு செய் துலகை நாளை
பிளந்திடல் ஆகா தென்றும்,
அரு விதி பலவும் யாத் திங்
கமரராய் உலவுகின்றார்!

எனக் காட்டி, நாளைய தமிழரான— உழைக்கும் மக்களுக்களாகிய நமக்கு வழிகாட்டுகிறார் சில்லையூர் செல்வராசன்.


கோனை முறித் தாட்சி பற்றிக்
குடி மக்கள் தம் கரத்துக்
கோலுயர வேண்டும்
குடியுயர மார்க்கம் அதே!

என்று அவர் காட்டிய அந்நிலை நமக்கென வந்து வாய்த்திடுமோ?

வரலாற்றுப் புனைகதை:

# தீ மூட்டல்

இதயராசன்



அரபு தேசத்தையும் தாண்டி, உரோம சாம்ராட்சியத்திலும் தமது மார்க்கத்தையும் இராச்சியத்தையும் விஸ்தரித்து, வெற்றிவாகை சூடிக்கொண்டிருக்கும் முகமது நபியின் விஸ்வாசத்துக்குரிய தோழர் கலீபா அமீர் குதிரையில் கம்பீரமாக இருக்கின்றார்.

அவர் முன்னே மண்டியிட்டு, அலெக்ஸாண்டரியா நூலகத்தின் காப்பாளர் சிலியோமீன்,

“வணக்கத்திற்குரிய கலீபா அவர்களே! தாங்கள் தயைகூர்ந்து எனது, விண்ணப்பத்தைச் செவிமடுப்பீர்களா?”

அமீரின் பதிலுக்காக, இன்னமும் மண்டியிட்டவாறே. அமீரின் முன்னே இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள், உருவிய வாளுடன், அமீரின் உத்தரவுக்காகக் காத்து நிற்கின்றனர்.

‘ம்’ என்றால் போதும், அடுத்த நொடியே அந்த அடிமையின் தலை சீவப்படும் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

ஆனால், அமீரின் உதட்டில் புன்னகை அரும்புகின்றது.

“எதுவானாலும் விரைந்து சொல்.”

அமீர் உத்தரவு போடுகின்றார். எதைச் சொல்ல வேண்டும், எவ்வாறு சொல்லவேண்டும் என்று, செவ்வை பார்க்கப்பட்டு வைத்திருந்த வார்த்தைகள் வெளிவந்தன,

“மரியாதைக்குரிய கலீபா அவர்களே! இந்த நூலகத்தில் நம்முன்னோர்கள் தலைமுறை தலைமுறையாகத் திரட்டி வைத்த அறிவுச் செல்வங்கள் உள்ளன.

கலீபா அவர்களே! பாபிலோனியாவின் செவ்விய வானவியல் நூல்கள், நிப்பாக்கிரட்டீஸின் மர்மம் துலக்கும் நூல்கள், பித்தாகரஸின் எண் இயல் அறிவு, தேலீஸ் கண்டுபிடித்தவை,

அரிஸ்ட்டார்க்கஸ், எரட்டாக்ஸ்தீனிஸ் ஆகியோரின் அரிய நூல்கள் எல்லாம் இருக்கின்றன. இவை அழிந்தால், பின்பு ஒருபோதும் இந்த மனித இனத்துக்குக் கிடைக்காது கலீபா அவர்களே!”

“ஓ அப்படியா? அப்படி முக்கியமானவை என்றால் எமது குரானில் அவை சொல்லப்பட்டிருக்க வேண்டுமே! அப்படிச் சொல்லப்படாருந்தால், இவற்றால் என்ன பயன்? இவை குரானில் இல்லையாயின், குரானுக்கு விரோதமானவை அழிக்கப்படத்தானே வேண்டும்.”

கலீபா அமீர் அவர்கள், தாம் விஸ்வாசிக்கும், இறை தூதரின் வாக்கினைத் ‘தராசாக’ வைத்துத் தீர்ப்புச் சொன்ன பின்னர், மொகலாய வீரர்களுக்கு வேறென்ன வேண்டும்.

நூலகத்தின் கதவுகள் இடித்து நொருக்கப்படுகின்றன. நூலக காப்பாளர் கண்முன்னே, அவர் போற்றிப் பாதுகாத்த பொக்கிஷம் தகர்கின்றது.

நூலகக் காப்பாளர் தனது, வாழ்நாளெல்லாம் தனது குழந்தைபோல் பாதுகாத்தவை, ஒரு நொடியில் இல்லாமல் ஆக்கப்படுவதைச் சகிக்காமல் கண்களை இறுக மூடிக்கொள்கின்றார்.

மாமன்னர் மகா அலெக்ஸாண்டரின் கனவு நகரம் அலெக்ஸாண்டரியா. இந்தியாவையும் வென்றதன் பின்னர், தான் உலகை வெற்றிகொண்டதன் சின்னமாக உலகிலேயே நீளமான நைல் நதி மத்தித்தரைக் கடலில் கலக்கும் இடத்தில், உலகின் தலை நகரமாக அலெக்ஸாண்டிரியாவை நிர்மாணிக்கத் தொடங்கி, அது நிறைவடையும் தருணத்தில் தனது 32 வயதில் (கி.மு. 323) அவர் இறந்து போனார்.

அலெக்ஸாண்டரின் நம்பிக்கைக்குப் பொறுப்பான படைத்தளபதி அதனை நிறைவேற்றி வைத்தான். இது நடைபெற்று 950 வருடங்கள் கடந்தபின்னர், இந்தப் பேரவலம் நூலகக் காப்பாளர் சிலியோமீன் கண்முன்னே நடைபெறுகிறது.

இந்த நூலகத்திற்கு வந்த சோதனை இது மட்டும்தானா? கி.மு. 145 இல் புத்தி ஜீவிகளைத் தூய்மைப்படுத்தல் என்ற பேரில் ஒரு மன்னன்,

கி.மு. 48 இல் ஜுலியசீசரின் கிளியோபத்திரா மீதான காதலால் ஏற்பட்ட போரில் தவறுதலாக என்ற முத்திரையுடன்,

கி.பி. 270 இல் அரியாசனச் சண்டையில் குளிர்காய, கி.பி. 390 இல் சாத்தான்களை ஒழித்தல் என்ற பேரில்,

எண்ணற்ற சூழ்நிலைகளில் பாதி எரித்தும், எரியாமலும், கவனிப்பாரற்றுமாகப் பலநூறு கண்டங்களைத் தாண்டித் தப்பிப் பிழைத்து, இற்றை வரை ஒரு பூட்டப்பட்ட நூலகமாகவேனும் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றுடன் கிரேக்க, ரோம், எகிப்திய, இந்திய, அரேபியாவின் அறிவுச் செல்வங்கள் தமது அழிவுக்கான இறுதி நிமிடங்களை எண்ணிக்கொண்டிருக்கின்றன.

நூலக காப்பாளர் இந்த நூலகம் பற்றிக் கேள்விப்பட்ட கதைகளை ஒன்றன்பின் ஒன்றாக நினைத்து, கண்ணீர் சிந்துவதைவிட வேறென்னதான் செய்துவிட முடியும்.

தோற்ற இனம் மண்டியிட்டுப் புலம்பத்தானே முடியும். இதற்குப் பிறகும் இந்த மண்ணுலகின் மூலை முடுக்கெல்லாம் நலிந்த இனங்களின் அறிவுத் தேட்டத்தில் தீ மூட்டல் அரங்கேறும் என்பதை அவர் அறிவாரா?

பூட்டிய நூலகத்தின் காப்பாளர் என்ற வகையில், தனது பணியாளருடன் அவற்றினை பேணி வந்ததோடு, தினமும் ஒரு புத்தகமோ, சுவடியோ வாசித்தவரல்லவா?

அதன் திறம் தெரிந்தவருக்குத்தானே அதன் பெருமையும் புரியும். அறிவுத் தேடலில் ஈடுபடுவோரை இரவு நேரத்தில், மெழுகுதிரி வெளிச்சத்தில் இரகசியமாகக் கற்பதற்கு உதவியிருக்கின்றார். எத்தனை பேருக்கு அவர்கள் கேட்ட நூல்களிலிருந்து குறிப்புகள் எடுத்துக் கொடுத்துள்ளார்.

தன்னை நாடிவந்தோரின், அறிவுப் பசிக்குக் குறைவின்றித் தீனிபோட்ட அறிவுத்தெய்வத்தை வழிப்போக்கன்போல் கடந்துபோக, அவரால் முடியவில்லை. அது ஒரு இனத்தின் சொத்து. பல தலைமுறைகளின் அறிவுக்களஞ்சியம்.

அவரது நினைவுத் திரையில் அலெக்ஸாண்டிரியா நூலகத்தின் எழுச்சியும் கிளர்ச்சியுமான ஜீவிதம் தொடர்பின்றித் தோன்றி மறைவதை நிறுத்த முடியவில்லை. அதுமட்டுமே அந்த நூலகத்திற்கு அவர் செய்யும் இறுதி அஞ்சலியாகவும் இருந்தது.

அலெக்ஸாண்டர் சிறுவனாக இருந்த காலத்தில், அன்றைய மாமேதை அரிஸ்டாட்டிலிடம் கல்வி பயிலும் பாக்கியம் கிட்டியது. எதனையுமே ஆர்வமுடன் நுணுகி நோக்கும் திறனுடையவனாகத் திகழ்ந்தமையால் அரிஸ்டாட்டிலின் விருப்புக்குரிய சீடனாகி, உலகை வெல்லும் மாமன்னனாகும் கனவுடன் வளர்ந்தவன்.

அரிஸ்டாட்டிலின் மாணவனான அலெக்ஸாண்டர், தான் போகும் இடமெல்லாம் விஞ்ஞானிகளையும் ஆசிரியர்களையும் தம்முடன் அழைத்துச் சென்றார். அங்குள்ள பொருட் செல்வங்களை மட்டுமல்ல, அறிவுச் செல்வங்களையும் தன்னுடன் எடுத்துச் செல்வதற்கே அந்த ஏற்பாடு.

அவ்வாறு சேகரித்தவையே அலெக்ஸாண்ட்ரியா நூலகத்தில் பாதுகாக்கப்பட்டன. அது மேற்கத்திய விஞ்ஞானத்திற்கும் அறிவுத்துறைக்கும் கேந்திர நிலையமாக மாறியது. நூலகத்தில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் சேகரிக்கப்பட்டிருந்தன.

ஒரு மிருகக்காட்சிச் சாலை, ஒரு தாவர இயற் தோட்டம், ஒரு வான இயல் வானோக்கு மண்டபம், மியூசியம் எனப்பட்ட பல்கலைக்கழகம் என்பன அமைந்து ஒரு அறிவியல் நகரமாகவே அழகிய அலெக்ஸாண்டிரியா திகழ்ந்தது.

அதில் பேராசிரியர்களாக மேலைத்தேய விஞ்ஞானிகளில் பெரும்பாலானோர் ஒரு காலத்தில் கடமை புரிந்தவர்களே. அங்கு கல்வி பயின்றோரே பின்னர் புகழ்பூத்த விஞ்ஞானிகளாகவும் திகழ்ந்தனர்.

ஆர்க்கிமிடீஸ், அரிஸ்ட்டார்க்கஸ், எரடாஸ்த்தீனீஸ் போன்றோர் இங்கு கல்வி பயின்று, பேராசிரியராகத் திகழ்ந்த மேதைகள்.

நூலகத்தின் காப்பாளர், பற்றி எரியும் நூலகத்தைப் பார்க்கும் சக்தி, தனக்கு இல்லை என்ற முடிவோடு, இன்னமும் கண்களை மூடியவாறே மண்டியிட்டவாறு அந்தக் கடற்கரை மணலில்.

நூலகம் தீப்பிடித்திருந்தால் அதன் சுவாலை அவரைத் தகிக்கவேண்டுமே. அவ்வாறு தகிக்காமையால் மூடுண்ட இமைகளை மெல்லத் திறந்து பார்க்கின்றார்.

அவருக்கு அருகில் யாரும் இல்லை. கலீபா அமீர் சென்று வெகு நேரமாகிவிட்டது. நூலகத்தின் நூல்கள் வண்டி வண்டியாக ஏற்றப்படுவதைக் கண்டு துக்கித்தாலும், நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றார்.

இங்கு இல்லாவிட்டாலும், எங்காவது பாதுகாப்பாக இருந்து, அறிவைத் தேடும் மாணவர்களுக்கு உதவினால் போதும் என்ற, அறிஞனுக்குரிய மனப்பாங்குடன், ஒரு மர நீழலில் ஒரு துறவியைப்போல அமர்திருக்கின்றார், நூலகக் காப்பாளர் சிலியோமீன்.

நூலகத்திற்கு முன்னால் பல காலத்திற்கு முன்னொரு நாட்பொழுதில் நடைபெற்ற அநியாயத்தினை அவரது தாயார் கண்ணீருடன் சொன்னது, இப்போது அவரது நினைவுத் திரையில்.

இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்கு முன்னரான (கி.பி.390) ஒரு ஞாயிற்றுக்கிழமை, தேவாலயத்தில் காலை ஆராதனை நிறைவுற்ற பின்னர்.

அன்றைய பிரசங்கத்தின் எழுச்சியால் தூண்டப்பட்ட மக்கள், அந்நிய தெய்வங்களை வணங்குபவர்களையும், புனித வேதத்திற்கு எதிராகப் பேசுகின்ற விஞ்ஞானிகளையும் சாத்தான்களாகவும், சூனியக்காரர்களாகவும் உருவகித்தவாறே வீதிக்கு இறங்குகின்றார்கள்.

அப்போது தனது வீட்டு வேலைகள் முடிந்த கையோடு, நூலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார், அந்த நகரத்தில் உள்ள ஒரேயொரு பெண் விஞ்ஞானியான ஹைப்பேஸியா. அவரது சிந்தனையில் அடுத்தநாள் விரிவுரைக்குத் தேவையான குறிப்புகளைத் தயாரிப்பதற்கான நூல்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு நடந்தார்.

யாரோ ஒருவர், விஞ்ஞானி ஹைப்பேஸியாவைக் கண்டிருக்க வேண்டும்.

"அதோ போகிறாள் சூனியக்காரி. விடாதீர்கள். துரத்துங்கள். கொல்லுங்கள்......"

ஒருவர் பின் ஒருவராக கூக்குரலிட்டவாறு, ஹைபேஸியாவை நோக்கி ஓடினார்கள்.

அவருக்கு என்ன நடக்கிறதென்று தெரியாமல் நூலகத்தின் முகப்புச் சந்தியில் நின்று, சத்தம் கேட்கும் திசையைத் திரும்பிப் பார்க்கின்றார்.

மாமிச வெறிபிடித்த ஓநாய் கூட்டம் ஒன்று, தனது இரையைக் கைவேறு, கால்வேறு, உடல்வேறாக பிய்த்துப் போட்டன.

என்ன? ஏது? என்று நிதானிக்கும் கணப்பொழுதிற்கும் அவகாசம் இல்லாமல், ஹைப்பேஸியா என்ற ஒரேயொரு பெண் மேதை, இரத்தமும் சதையுமாகத் தரையில் சிதறியது.

ஹைபேஸியா என்ற இளம் விஞ்ஞானியின் தசைகளைப் புசித்த ஓநாய்க்கூட்டம் இன்னும் இன்னும் இரைதேடி வீதி வீதியாக நாக்கைத் தொங்கப்போட்டபடி நரமாமிசம் புசிக்கும் சாத்தான்களாய் அலைந்தன. கண்ணில்பட்ட நூல்களையும், சுவடிகளையும் எரியூட்டி வெறியாடின.

ஹைபேஸியா பெண்களில் படித்த விஞ்ஞானி என்பதையும், கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதையும், ஒவ்வொரு முறையும்

சிலியோமீனுக்கு அவரது தாயார் உணர்வுபூர்வமாகச் சொல்லும்போதும், ஒவ்வொரு முறையும் கவலைப்பட்டிருக்கின்றார். ஆனால் அம்மாவின் உணர்வுகள் அவரிடம் பிரதிபலிக்கவில்லை. இன்று நினைக்கும் போது அதன் கொடூரம், இறந்துபோன தாயாரின் முகத்தில் பிரதிபலித்தை தனது முகத்தில் பிரதிபலிக்கின்றார்.

அந்தக் கொடூரத்தின் பின்னர், அலெக்ஸாண்ட்ரியாவில் அறிவியல் என்பது சூனியக்காரரின் சூனியமாகவே வெறுக்கப்பட்டது. அத்தகையவர்கள் வேட்டையாடப்பட்டனர்.

உரோம் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ஜஸ்ட்டினியன் உத்தரவின்படி (கி.பி.528) அலெக்ஸாண்டரியா நூலகம் இழுத்து மூடப்பட்டது.

நூலகம் எரிக்கப்படுவதில் மன்னனுக்கு உடன்பாடு இல்லையோ! அல்லது கனவில் வந்த தேவதூதன் எரிக்காதே என்று சொன்னதோ! தெரியவில்லை. பூட்டிய நூலகத்தினைப் பாதுகாக்க ஒரு காப்பாளரும், பராபரிப்புக்காப் பணியாளர்களும் நியமித்து அவர்களின் ஊதியத்திற்கும் நிரந்தரமான ஏற்பாடு செய்தான்.

நூறு வருடமாக பூட்டப்பட்ட நூலகத்திற்குப் பரம்பரை பரம்பரையாக வகித்துவந்த பதவி சிலியோமீனுடன் அஸ்தமனமாகின்றது.

உடல் வலுவுடன், மனவலுவினையும் முற்றாகவே இழந்துவிட்டார் நூலகத்தின் இறுதிக்காப்பாளர் சிலியோமீன்.

கண்ணுக்கு எட்டிய தொலைவிலுள்ள படைவீரர்களின் முகாமில், படைத் தலைவர்கள் வேட்டையாடிய அலுப்புத்தீர, மூலிகைக் குளியலுக்கான வெந்நீர் அடுப்புகளில், அந்த அருமருந்தான புத்தகங்கள் விறகாகி எரிந்துகொண்டிருந்தன.

படைவீரர்களின் 4000 வெந்நீர்த் தொட்டிகளைச் சூடாக்குவதற்கு ஆறு மாதங்களாக எரிந்து கொண்டே இருக்கப்போகின்றது என்பதும்,

நீண்ட நெடுங்காலத்தின்பின்னர், அலெக்ஸாண்டர் போலவே அறிவியலை நேசிக்கும் ஒரு பக்தாக் பேரரசன் ஹரூன் அல் ரஷீது, 'ஞானத்தின் இல்லம்' என்னும் மாபெரும் நூலகத்தை உருவாக்குவான் என்பதனையும்,

அதையும் முரடர்களான மொங்கோலியர் எரிப்பார்கள், மாங்காய்த் தீவிலும் தன்னைப் போலொரு துறவி, தீ மூட்டலில் உயிர் துறப்பாரென்று, அவருக்கு எப்படித் தெரியப்போகின்றது.

மேலைக் கடற்கரையில் வானுயர்ந்த நூலகத்தின் உடல் துடிதுடித்து எரிந்துகொண்டிருப்பது போன்ற ஒரு மனப்பிரமை, அவரை உண்மையெனவே நம்பிவிட்டார்.

அவரது ஒளி மங்கிய கண்களுக்கு, நூலகத்தின் கோபுரத்தினை நிறைந்த கரும்புகை மண்டலத்தின் மேல், பண்டைய கலைத் தெய்வமான மியூசஸும், ஹைபேஸியாவும் வெண்ணிற ஆடையுடன் இருகரம் நீட்டி அழைக்கின்றார்கள்.

"மகனே! சிலியோமீனே! ஏன் தாமதிக்கின்றாய்? விரைந்து வா?"

○

---

# பொய்மைகள் என்றுதான் போகும்

உண்மையாக உழைத்துக் களைப்பவன்
உரிமை, ஊதியம், பலன்கள், கவுரவம்
என்பவை இன்றி அவமதிக்கப் பட
ஏய்த்து மேய்ப்பவன் பொய்வேடம் பூண்பவன்
தன் நடிப்பால் உலகை மயக்குவோன்
தகுதிகள் அற்றும் தலைவனாய் மாறுவான்!
மண்ணின் நம்பிக்கை தன்னை ஏமாற்றியே
வாழ்ந்துயர்வோன்...வணங்கப் படுகிறான்!

இப்படி உண்மை ஏங்கிக் கிடக்கவும்
இங்கு பொய்யும் புரட்டொடு போலியும்
அப்பழுக்கற்ற வேசம் நடிப்பும்... நம்
அயலை முட்டாள்கள் ஆக்கி மோசம் செயும்
செப்படிகளும் வெல்லும் இழிநிலை.
'செயல்கள்' தோற்று வாய் வீச்சே பெறும் விலை.
எப்படிச் சரிதம் பெறும் விடுதலை?
என்று ஓயுமோ இந்த இடர் அலை?

மெய் முயல்வும், உண்மை உழைப்பதும்,
வேர்வை ஊற்றி விளைத்திட்ட செல்வமும்,
பொய்யை போலியை வேடப் புனைவினை
புடைத்து நிஜத்தை தெரியும் முறைகளும்,
பையை நிரப்பாது பண்பன்பை நல்கி
பலம்சேர் வாழ்வை பயிற்றும் கலைகளும்,
உய்யவைத் தூரை உயர்த்தும் அரசியல்
உறுதியும்...,என்றெம் மண்ணில் பொலியுமோ?



சு. ஜெயசீலன்

# புத்தகங்களுடன் வாழ்தல் என்பது...

ச. சசீவனி

புத்தகங்களுடன் வாழ்தல், புத்தகங்களுடன் இருத்தல், புத்தகங்களை அறிமுகம் செய்தல் என்பது ஒரு இனிய அனுபவமாகும். மேலும் மக்களிடையே புத்தகங்களைக் கொண்டு சென்று அறிமுகம் செய்து புத்தகப்பண்பாட்டை ஊக்குவித்தல் என்பது இவ்வினிய அனுபவத்தினை அழகாக்கும். பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை நூலகங்களே இப்பண்பாட்டின் நிலைக்களமாக இருந்து வந்துள்ளன.

எனினும் தற்கால சூழ்நிலையில் இன்றிலிருந்து நூல்களும், நூலகங்களும் இயங்கும் முறையை மீள் பரிசீலனைக்குட்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நவீன தொழினுட்பங்கள், கணனித் திரைக்குள்ளும் கைத்தொலைபேசியின் தொகுதிகளுக்குள்ளும் நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகை இதழ்களையும் கொண்டுவந்துவிட்ட பின்பு நூல்களைத் தேடி நூலகங்களுக்குச் செல்வோர் எத்தனை பேர்? பெரிய இறாக்கைகளில் ஒழுங்காக அடுக்கப்பட்ட நூல்களுக்கு முன்னால் தொடு திரையில் (touch Phone) நூல்களை வாசித்துக்கொண்டிருக்கும் நூலகர்களையும் நூலக உத்தியோகத்தர்களையும், வாசகர்களையுமே தற்காலத்தsல் நாம் காண்கிறோம். அதிலும் குறிப்பாக தற்போது ஏற்பட்டிருக்கும் covid 19 பெருந்தொற்றுப் பேரிடர்களுக்குப்பின் நூலகங்களை நோக்கி வாசகர்கள் நகர்வதைக் குறைக்கும் அல்லது சாத்தியமற்றதாக்கும் போக்கே எதிர்காலத்தில் தென்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்போது கூடப் பெரும்பாலான முன்பள்ளிகள், சனசமூகநிலையங்கள், அறநெறி நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இதுவரை அசையா நூலகங்களை வாசகர்கள் தேடிச்சென்ற காலம் போய் நூல்நிலயங்களையும், நூல்களையும் வாசகர்களை நோக்கி அல்லது வாசிப்பதில் ஆர்வம் கொண்ட மக்களை நோக்கி அசையச் செய்ய வேண்டிய மாற்றுச் சிந்தனை முறையொன்றினைக் கடைப்பிடிக்க வேண்டிய காலகட்டத்தில் நாமிருக்கின்றோம். பரீட்சையை மையப்படுத்திய கல்விமுறை வந்துவிட்ட பின்பு பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட பொழுதுபோக்கு அம்சம்மிக்க நூல்களையும், அறிவு சார்ந்த நூல்களையும் வாசிப்பதை சிறுவர்கள் முதல் பெரியார்கள் வரை அனைவரும் நிறுத்திவிட்டதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மைநிலை அவ்வாறானதல்ல. அவர்கள் வாசிப்பதற்குத் தயாராகவே இருக்கிறார்கள். நாம்தான் அவர்களுக்குகந்த தேவையான நூல்களை வழங்க இன்னும் தயாராகவில்லை என்பதே உண்மையானது.

குறிப்பாக 10 அல்லது 12 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் நூல்கள் மீதும், வாசிப்பின் மீதும் எவ்வாறான ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொண்ட போது பல ஆச்சரியமான தகவல்கள் எமக்குக் கிடைத்தன. உண்மையில் நாம் புத்தகப் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பினூடாக மக்களுக்கு வாசிப்பின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துமுகமாக நூல்களை அறிமுகம் செய்யும்போதே இவற்றை அறிந்து கொண்டோம்.

நாம் எமது மக்களுக்கு புத்தக வாசிப்பிலும், புத்தகங்களிலும் ஆர்வத்தை ஏற்படுத்துமுகமாக புத்தகப் பண்பாட்டுப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி அதனை இயக்கிவருகிறோம்.

உருவாக்கப்பட்டுள்ள இவ்வமைப்பில் பலதரப்பட்டவர்களும் உறுப்பினராக உள்ளனர். புத்தக வாசிப்பு, புத்தகப் பண்பாடு மீது ஆர்வமுள்ள எவரும் இதில் இணைந்துகொள்ளலாம். நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் இதன் அலுவலகம் அமைந்துள்ளது. நாம் எமது அமைப்பின் பரீட்சைக்களமாக யாழ் குடாநாட்டையே தற்காலிகமாகத் தற்போது தேர்ந்தெடுத்துள்ளோம். எமது அமைப்பு நேரடியாக புத்தகங்களை எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், பதிப்பாளர்கள் ஆகியோரிடமிருந்து கொள்வனவு செய்கிறது. புத்தகங்களை இதன் மீது ஆர்வமுள்ள மக்களுக்கு நேரடியாக வீட்டிற்கே கொண்டுசென்று வழங்குகிறோம். நிறுவனங்களிற்கும், பொது அமைப்புகளிற்கும், அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க

விநியோகிக்கின்றோம். தேவையானவர்கள் அலுவலகத்திற்கு நேரடியாகவும் வந்து பெற்றுக் கொள்கிறார்கள். புத்தக விநியோகம் எனும்போது புத்தக விற்பனையையே பெரும் பாலும் மேற்கொள்கிறோம். புத்தகங்களை வாங்குவதற்கு வசதியற்ற குறிப்பாக நிதிவசதி குறைந்த வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் நூலக சேவை போன்று புத்தகங்களை இரவல் வழங்குகிறோம். அவர்கள் வீட்டிற்க்கு கொண்டுசென்று வாசிக்கலாம். ஒரு மாதத்திற்குள்ளாக புத்தகங்களை மீளப்பெறுகிறோம்.

மக்களிற்கு புத்தகங்களை வழங்கும்போது குறிப்பாக சிறுவர்களே எமது பிரதான இலக்காக இருக்கிறார்கள். சிறுவர்கள் தமக்கு உகந்த புத்தகங்களை ஆர்வமுடன் பார்க்கிறார்கள். வாசிக்கிறார்கள். பெற்றோரிடம் கூறி அதனை வாங்குகிறார்கள். பெற்றோரும் தமது பிள்ளைகளுக்காக மறுப்பேதுமின்றி வாங்கிக் கொடுக்கிறார்கள். இதன்மூலமாக பெற்றோர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான நூல்களை வழங்குகிறோம். அவர்களும் வாசிக்கிறார்கள். தமக்கு விருப்பமான புத்தகங்கள் எவையெனத் தெரிவிக்கிறார்கள். இதன்மூலம் அவர்களது வாசிப்பு ரசனையை நாம் அறிந்துகொள்கிறோம்.

புத்தக வாசிப்பின்மீது மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துமுகமாக புத்தக கண்காட்சிகளையும், புத்தக அறிமுக விழாக்களையும் ஏற்பாடு செய்து நடத்துகிறோம். இவை ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் கிராம மட்டத்திலும் ஏற்பாடு செய்து நடாத்தப்படுகிறது. குறிப்பாக சிறுவர்கள், மாணவர்களுக்கான நூல்களின் அறிமுக விழாவினை நடத்தும்போது மாணவர்களே குறிப்பிட்ட நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்குகிறார்கள். நூலிலுள்ள விடயங்களை ஒவ்வொரு சிறார்களும் வாசித்துக் காட்டுகிறார்கள். பின்னர் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்கிறார்கள். பாட்டு, இசை, நடனம், நடிப்பு போன்ற கலை நிகழ்வுகளும் நடத்தப்படுகிறது. இதனால் சிறுவர்கள் தாம் மகிழ்ச்சிகரமாக இருப்பதை உணருகிறார்கள்.

எமது புத்தக விநியோகத்தில் சிறுவர்களுக்கான நூல்கள், சிறுவர் படக்கதைகள், குழந்தைப் பாடல்கள், சிறுவர் சஞ்சிகைகள் என்பன இடம்பெறுகின்றன. இத்துடன் கவிதை நூல்கள், இலக்கியக் கட்டுரைகள், சிறுகதை, நாவல், ஆன்மீக சஞ்சிகைகள், மாதாந்த இலக்கிய சஞ்சிகைகள், காலாண்டு சஞ்சிகைகள் ஆகியனவும் உள்ளன. இவைதவிர எமது



புத்தகப் பண்பாட்டு வலையமைப்பினூடாக 'எங்கள் முற்றம்' என்ற சஞ்சிகையின் முதல் பிரசுரத்தையும் தற்போது வெளியிட்டுள்ளோம். கலை, இலக்கிய சமூக இதழாக இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவரும்.

சமகாலங்களில் மக்கள் ஒன்றுகூடும் இடங்களான ஆலயத் திருவிழாக்கள், பிறந்ததின, திருமண நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு அவர்களின் அனுமதியைப் பெற்று அவ்வவ் இடங்களில், புத்தகக் கண்காட்சிகள், புத்தக வாசிப்பு, புத்தக விற்பனை ஆகியவற்றினை மேற்கொள்வதுடன் அதனுடன் இணைந்ததாக ஆடல், பாடல், நடிப்பு, இசை, நடனம் போன்ற அரங்கப் பண்பாட்டினையும் செயற்படுத்துகிறோம். இதன்மூலமாக மக்களை முற்றங்களில் ஒன்று கூட்டி புத்தகப் பண்பாடு, அரங்கப்பண்பாடு ஆகியவற்றுடன் மக்கள் முற்றம் அமைப்பையும் செயற்படுத்துகிறோம்.

நிறைவாக ஒரு விடயத்தினைக் கூறி இக்கட்டுரையை நிறைவுசெய்யலாமென நினைக்கிறேன். பொதுவாக தற்காலத்தில் பலரும் தத்தமது வீடுகளில் வரவேற்பறைகளில் சோகேஸ்களில் பலவிதமான அழகுசாதனப் பொருட்களை அடுக்கிவைத்திருப்பார்கள். இது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். எனினும் நாம் எதிர்காலத்தில் அனைவரது வீட்டு வரவேற்பறைகளும் புத்தகங்களால் நிறைந்திருப்பதையே காண விரும்புகிறோம். புத்தகப் பண்பாடு எனும் புதிய பண்பாட்டினை மக்களுக்கு அறிமுகம் செய்வதனூடாக இதனைச் சாத்தியமாக்கலாம் என்பதுடன் மகிழ்வான, ஆரோக்கியமான, ஜனநாயக சூழலையும் இதன்மூலம் ஏற்படுத்தலாம் என்பதும் நமது நம்பிக்கையாகும்.

sajeelan82@gmail.com

மாணவர் ஆக்கம் :

# குறிஞ்சிக்குப் போனாராம் குச்சியப்ப சாமியார்

தர்மிகா உமாசுதசர்மா
தரம் 7
யா /கொக்குவில் இந்துக் கல்லூரி

குறிஞ்சி எனும் ஊரில் சிவன் கோவில் இருந்தது. அவ்வாலயத்திற்கு செல்ல வேண்டும் என்பது திருமேனி காவற்காடு எனும் ஊரில் வசிக்கும் குச்சியப்பனின் ஆசை. 'திருமேனி காவற்காடு என்று, ஏன் இந்த ஊரை அழைக்கின்றனர்?' என்பது அவனின் நீண்டநாள் சந்தேகம். அதனால் பாட்டியிடம் சென்று விளக்கம் கேட்டான். அதற்குப் பாட்டி, இங்கு பழமையான சிவன்கோவில் இருந்தது; அக்கோவில் சிவலிங்கம் சக்தி வாய்ந்தது என்கிறார். அதற்கு குச்சியப்பன் ஆவலாக, என்ன சக்தி என்ன சக்தி என்று கேட்க; பாட்டி அக்கோவில் சிவனிடம் என்ன வேண்டினாலும் கிடைக்கும் என்பதனால், கொள்ளையர்கள் சிலர் வணிகர் போல வேடம் தரித்து சிவலிங்கத்தை குறைந்த விலைக்கு வாங்க நினைத்த கதையை கூறத் தொடங்கினார்.

சில தினங்களில் குச்சியப்பர் புறத்தை வந்தடைந்தனர் கொள்ளையர்கள். வாழியர் வம்சத்தினர் அக்கால ஆட்சியர்கள். அவ்வூர் சத்திரத்தில் தங்கி மறுநாள் வாழியர்கள் உடன் சிவலிங்கத்தை வாங்கும் நோக்கில் உரையாடச் சென்றனர். ஆனால் வாழியர்களோ "தர முடியாது அது எங்கள் சொத்து" என்று கூறியும் போகமறுத்த கொள்ளையர்கள் ஆயுதங்களைக் காட்டி மிரட்டினர். ஆனால் வாழியர்கள், அவர்களுடன் போரிட்டு வெற்றி பெற்றனர். அதைத் தாங்க முடியாத கொள்ளையர்கள் இரவோடு இரவாக சிவலிங்கத்தை கடத்த முயற்சித்தனர்.

ஆனால் வாழியர்களோ சிறந்த போர் முறைகளைப் பயன்படுத்தி கொள்ளையர் களை சிறையில் அடைக்காது, 'நேர்மையாக வாழுங்கள்' என்று கூறி அனுப்பி வைத்தனர். பின்பு தான் தெரிந்தது, வந்தது வணிகர்கள் அல்ல கொள்ளையர்கள் என்று. போரில் தோற்றது தங்கள் அனைவருக்கும் அவமானம் என்றெண்ணி தம்மை தாமே கொலை செய்து இறந்து விட்டார்கள் கொள்ளையர்கள்.

இரண்டரை வருடத்திற்குப் பின்னர் மார்கழி மாதம் இடியுடன் ஒரு பலத்த மழை பெய்தது. ஊரே வெள்ளக்காடானது. சில தினங்களுக்குப் பின்னர் ஊர் பழைய நிலையை அடைந்தது. செந்நிறச்செல்வன் செங்கதிர் வீசினான். பட்சிகளின் பாட்டுக்குரல் ஊரை எழுப்பியது. கோவில் கதவைத் திறந்தனர் பூஜை செய்வதற்காக, ஆனால் சிவலிங்கத்தைக் காணவில்லை. கொள்ளையர்கள் தான் எடுத்திருக்க வேண்டும் என்று வாழியர்கள் நினைத்தனர். இறந்து போன கொள்ளையர்களின் புதல்வர்கள், வஞ்சம் தீர்க்க சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். நள்ளிரவில் அவர்களின் நடமாட்டம் இருந்ததை ஐந்து வயது சிறுவன் அரைநித்திரையில் கண்டிருக்கின்றான், ஆனால் கனவென்று எண்ணி பேசாது இருந்தது தான் அவன் செய்த குற்றம்.



நடந்தவற்றை அறிந்ததும் சிறுவன் உண்மையைக் கூறினான். வாழியர்களுக்கு அப்போது தூது ஒன்று வந்தது. அதில்,

நாங்கள் நடுக்கடலை அடைந்து விட்டோம். இனி உங்கள் சிவலிங்கத்தை மீட்க முடியாது என்று இருந்தது. இதைக்கேட்ட சிறுவன் அதற்கொரு யோசனை கூறினான். கொள்ளையர் குழுவின் இருப்பிடம் தெரிந்து விட்டதால், விரைந்து சென்று சிவலிங்கத்தை மீட்போமே என்றான். இதைக்கேட்ட வாழியர்கள் சிறுவனையும் உடன் அழைத்து கடல் நோக்கி விரைந்தார்கள். கப்பலோட்டுவதில் திறமை பெற்ற வாழியர்கள் கொள்ளையர் குழுவின் கப்பலைக் கைப்பற்றினார்கள். அவர்களுடன் போரில் வெற்றியீட்டி சிவலிங்கத்தை மீட்டார்கள்.

இதனால் அவமானம் அடைந்த கொள்ளையர்களில் ஒருவன் யாரும் அறியாத சமயம் பார்த்து சிவலிங்கத்தை கடலில் தள்ளி விட்டான். இதனால் கலக்கமுற்ற  வாழியர்கள் சுழியோடக்கூடிய ஒருவனின் உதவி கொண்டு சிவலிங்கத்தை மீட்டார்கள். அந்த சமயம் பார்த்து சிற்பியின் மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. பணத்தேவை இருந்ததால் சிலை செய்ய யாராவது வருவார்களா, என எதிர்பார்த்துக் காத்திருந்தார் சிற்பி. சிவலிங்கத்தை கொள்ளையர்கள் கடத்திச்சென்றனர் என்பது சிற்பி சின்னக்கண்ணனுக்குத் தெரிந்ததும் ஆனந்தக்கூத்தாடினார். வாழியர்களிடம் சென்றார். மக்கள் உண்மையைக் கூறினர். வாழியர்கள் சிவலிங்கத்தை கொண்டு வந்தனர்.

இதைக் கண்டான் சின்னக் கண்ணன், இது போலிச் சிவலிங்கம், உண்மையான சிவலிங்கம் இது இல்லை என்று அடித்துக் கூறினான் சிற்பி சின்னக் கண்ணன். ஊர் மக்கள் சின்னக் கண்ணன் கூறுவது உண்மை என்று எண்ணி வாழியர்களை சந்தேகப்பார்வை பார்த்தனர். உடனே ஊர் மக்களில் ஐவர் முன்வந்து சிவலிங்கத்தை ஏரியில் போட்டார்கள். சென்ற வருடம் வெள்ளம் வந்த போது பெரும் புயல் வரவிருந்தது. ஆனால் அந்த சிவலிங்கத்தின் மகிமை புயலைத்தடுத்து தெற்கு நோக்கித்திருப்பியது. ஆனால் அந்த சிவலிங்கம் இல்லாததால் அடுத்த வருடமே புயல் வந்து ஊரையே அடித்துச்சென்றது. முன்பு அந்த சிவலிங்கம் ஊரையே காத்ததால் திருமேனி காவற்காடு என்று பெயர் வந்தது என்று பாட்டி கூறி பொல்லுத்தடியுடன் நடந்து சென்றார்.

குச்சியப்பனை அவனது அம்மா அழைத்ததும், கடகடவென்று அடுப்பங்கரை நோக்கிச்சென்றான். அன்னை உணவுத்தட்டை கொடுத்தார். ஆனால் குச்சியப்பனின் நினைப்பு முழுவதும் சிவலிங்கத்தைப் பற்றியே இருந்தது. அவ்வாறே சில வருடங்கள் கழிந்தது. குச்சியப்பனுக்கு வந்த கனவெல்லாம் நடக்க ஆரம்பித்தது. ஆனால் அதை குச்சியப்பன் பெரிதுபடுத்தவில்லை, சில தினங்களுக்குப் பிறகு அவன் தியானம் செய்யும் போது பல காட்சிகள் கண் முன்னே தோன்றின. இதற்குமேல் பொறுக்கமுடியாமல் பாட்டியிடம் தனது பிரச்சினையை விளக்கினான் குச்சியப்பன்.

உடனே பாட்டி ஊர்ப் பெரியவர்களிடம் குச்சியப்பனின் பிரச்சினைக்குத் தீர்வு கூறுமாறு கேட்டார், அதற்கு ஊர்ப்பெரியவர்கள் இது கடவுளின் அருளே என்று கூறி மகிழ்ந்து குச்சியப்பனைக் கொண்டாடினார்கள். அதன் பின்னர் ஊர்மக்களுக்கு பிரச்சினை நேரும் போது உதவியாக இருந்தார் குச்சியப்பன். ஊர்மக்களும் அடிக்கடி சென்று கேட்டு வருவார்கள் தங்கள் பலாபலனை .

ஊரிற்கு புதிதாக ஒருவன் வந்தான். அவன் பெயர் முத்து. அடிக்கடி ஊர் மக்கள் குச்சியப்பன் வீட்டிற்கு சென்று வந்ததைப் பார்த்தான்.


அவர்களில் ஒருவனை அழைத்து, ஏன் அங்கு சென்று வருகின்றீர்கள் என்று வினவினான் முத்து. அதற்கு அவன் அந்த வீட்டில் எதிர்காலத்தில் நடப்பவற்றை கூறும் ஒருவன் இருக்கின்றான், அதனால் தான் எங்கள் பலனை சென்று கேட்டு வருகின்றோம் என கூறினான். அவன் சொல்வதெல்லாம் நடக்குமா என கேட்டான் முத்து, ஆமாம் ஆமாம் என்று தலையாட்டிச் சென்றான். “ஓ சாமியார் வசிக்கும் இல்லமே. சென்று கேட்டுவருவோம்” என்று சென்றான் முத்து.

வரிசையில் நின்றான் முத்து. குச்சியப்பனுக்கு அருகில் சென்றான், “சாமியாரே! சாமியாரே! எனக்கு பலன் சொல்லுங்கள் சாமியாரே” என்றான். உடனே பின் நின்ற மக்களும் அதையே கூறினர். குச்சியப்பனை குச்சியப்ப சாமியார் என அழைக்கத் தொடங்கினர். மக்கள் பாட்டியிடம் சென்று உங்கள் பேரனை பக்கத்து ஊர்களுக்கு அனுப்பி அவ்வூர் மக்களை பயனடையச் செய்யுங்கள் என்று கூறிச்சென்றனர்.

வயோதிபத்தால் படுக்கையாகக் கிடக்கும் பாட்டியிடம் சென்ற குச்சியப்பனை தழுவி ஊர் மக்களின் விருப்பத்தைக் கூறி, அதையே தானும் விரும்புவதாக கூறி இறந்தார் பாட்டி.

பாட்டியின் ஆசையை நிறைவேற்ற வேண்டி ஊர் ஊராக புறப்பட்டார் குச்சியப்ப சாமியார். சிறு பிள்ளையாக இருக்கும் போது பத்திரிகை ஒன்றில் பிரசுரமான சிவலிங்கத்தைக் காட்டி “இது தான் எங்கள் ஊர் சிவலிங்கம்” என்று  பாட்டி கூறியது நினைவிற்கு வந்தது. அதைப்போலவே உள்ள சிவலிங்கத்தை ஊர் ஏரியில் எறிந்து கிடப்பதைக் கண்டு, சிவலிங்கத்தை மீட்டு அபிஷேகம், ஆராதனை செய்து ஊர் நடுவே வைத்து வழிபட்டார். இதை கண்ணுற்ற மக்களும் வழிபட ஆரம்பித்தனர். தனது முதல் கடமை முடித்து அனைத்து ஊர்களுக்கும் சென்றபின், தனது விருப்பப்படி குறிஞ்சியில் உள்ள சிவாலயத்தை அடைந்தார் குச்சியப்ப சாமியார். அங்கு தொண்டுகள் செய்தும், அடியார்களுக்கு உதவியும் தனது மிகுதிக் காலத்தைக் கழித்தார். ஊர் மக்களும் தமது சொத்தான சிவலிங்கத்தை போற்றி பாதுகாத்து வழிபட்டனர்.

# மல்லிகை ஜீவாவுக்கு புகழஞ்சலி



ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுகதை எழுத்தாளராக பரிணமித்து இதழியலில் மல்லிகை எனும் இதழை தனியொரு மனிதராக தொடங்கி 44 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியிட்டு தடம் பதித்த டொமினிக் ஜீவா என்ற எழுத்தாழுமை தனது 93வது வயதில் தனது மூச்சை நிறுத்திக்கொண்டார்.

தண்ணீரும் கண்ணீரும் என்ற சிறுகதைத் தொகுப்பின் மூலம் 1966 இல் தனது சிறுகதை ஆக்கங்களை வெளிக்கொணர்ந்த அவரது ஏனைய சிறுகதைத் தொகுப்புகளாக பாதுகை, வாழ்வின் தரிசனம், சாலையின் திருப்பம், டொமினிக் ஜீவா சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன.

ஜீவாவின் படைப்புகள் சாதியத்தின் பிடிக்குள் சிக்குண்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான அடக்குமுறைகள், அவர்களது வாழ்நிலை, போராட்டம் என விரிகின்றன. முதல் தொகுப்பே சாகித்ய மண்டலப் பரிசினைப் பெற்றது. பொதுவுடமை இயக்கத்தில் இணைந்துகொண்ட அவர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்திலும் அதன் வளர்ச்சியிலும் தன்னை இணைத்துக்கொண்டவர். 90களில் யாழ்ப்பாணத்தில் தோற்றம்பெற்ற எழுத்தாளர் ஒன்றியத்தின் ஆரம்பச் செயலாளராகவும் திகழ்ந்தவர்.

ஈழத்தில் அக்கினிப் பரீட்சை எனக்கருதப்படுகின்ற சஞ்சிகை வெளியீட்டில்1966 இல் அடியெடுத்து வைத்து 44 ஆண்டுகள் மல்லிகை இதழைத் தொடர்ச்சியாக மாத இதழாக - ஒரு முற்போக்குச் சஞ்சிகையாக தனிமனிதனாக நின்று வெளியிட்டு சாதனை படைத்தமையே இன்று உலகெல்லாம் அவரது நினைவை இணையவழியில் அஞ்சலி நிகழ்வை பல மட்டங்களிலும் நடாத்துவதற்குக் காரணமாக அமைந்தது. சஞ்சிகையின் வெளியீட்டாளராக ஆசிரியராக, விநியோகத்தராக எனப் பல தளங்களில் அந்த இதழை பாமர மக்கள் மத்தியிலும் கொண்டுசென்றவர்.

ஈழத்தின் மூத்த முன்னணி எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக்கொணர்ந்தவர் என்பதுடன் நின்றுவிடாது எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஆய்வாளர்கள் எனப் பல்வேறு தளங்களில் இயங்கியவர்களின் நிழலுருக்களை அட்டைப் படமாக இடம்பெறச் செய்ததுடன் அவர்களைப் பற்றிய அறிமுகத்தையும் ஒவ்வொரு இதழ்களிலும் இடம்பெறச் செய்தவர்.

மல்லிகை இதழ் பற்றி விமர்சன நூலாக எண்பதுகளில் மல்லிகை விமர்சனங்கள் எனும் நூல் வரதர் வெளியீடாக 1996 இல் வெளிவந்தமையும் குறிப்பிடக்கூடியது. இதனை எழுதியவர் ம. தேவகௌரி.

இவர் எழுதிய கட்டுரை நூல்களாக அனுபவ முத்திரைகள், எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம், அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம், நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள், முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள் ஆகியன வெளிவந்துள்ளன.

மல்லிகை இதழை மட்டும் அன்றி மல்லிகைப் பந்தல் எனும் நூல் வெளியீட்டு முயற்சியையும் தொடங்கி எழுத்தாளர்கள் பலரது நூல்களையும் பிரசுரித்து பதிப்பாளராகவும் திகழ்ந்தார்.

ஈழத்தில் மல்லிகை சகாப்தத்தை தோற்றுவித்த மல்லிகை ஜீவாவிற்கு எங்கள் முற்றம் இதழும் தனது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு இரண்டாவது இதழின் அட்டையில் அவரது நிழலுருவைப் பொறித்து கௌரவிக்கின்றது.

**கொக்குவிலில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் டொமினிக் ஜீவா அஞ்சலி நிகழ்வு**


















# வளரும் பயிரை முளையில் தெரியும்

வ. சுப்பிரமணியம்



"தம்பி! ராகுலன் மாடுகள் உள்ளே வந்து கன்றுகாலிகளை அழித்துவிடாலம் பார்த்துக் கொள். நான் ஒருக்கா சந்தைக்குப் போட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு விமலா தனது கடகத்தையும் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு சந்தைநோக்கிப் புறப்பட்டுச் சென்றாள்.

விமலா ஒரு இளம் விதவை. அவளுடைய கணவன் மூலம் கிடைத்த பத்துப் பரப்புக் காணியில் தோட்டம் செய்கிறாள். சிறிய மேடை போட்டு முளைக் கீரையும் பக்கத்தில் வெண்டி, கத்தரி, தக்காளி மரக்கறிகளுடன் பக்கத்தில் மரவள்ளியும் செய்கை பண்ணப்பட்டிருந்தது. அதைவிடக் கரையோர முள்வேலிப் பக்கமாக பாகல், புடோல், நீற்றுப் பூசணி, பீர்க்கு, வெள்ளரிக்கொடிகளும் படர்ந்து வளர்ந்து பூவும், பிஞ்சுகளுமாக காட்சியளிக்கின்றன. ராகுலன் ஏ. எல் பரீட்சை முடித்துவிட்டுப் பெறுபேற்றிற்காக காத்திருக்கிறான். அவனுக்கு விவசாயம் என்றால் மிகவும் பிடிக்கும். சிறுவயது தொடக்கம் பெற்றோருடன் வந்து தோட்ட வேலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். பத்தாம் வகுப்பில் விவசாயத்தை ஒரு பாடமாக எடுத்து- அதில் திறமைச் சித்தி பெற்றவன். கம நல அபிவிருத்தி காரியாலயம் சென்று விதைகளை வாங்கிவந்து- அவற்றைச் செய்கை பண்ணுவதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்துகிறான். அவனுக்கொரு தங்கையும் இருக்கிறாள். பிரேமா என்பது அவளது பெயர். அவளும் தமையனைப் போலவே படுசுட்டி. பத்தாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கிறாள். அவள் ஓய்வு நேரங்களில் தோட்டத்திற்கு வருவாள்.

படிப்பும், தையல் மெசினில் தையல் வேலைகளுமாக அவளது பொழுது பிரயோசனமாகவே கழிகிறது. ரியூஷனுக்குப் போவதில்லை. சந்தேகம் வரும் பாடங்களைத் தமையனிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளுவாள். மிகுந்த பொறுமைசாலி. தாயிடமிருந்து தையல் வேலையைக் கற்றுக் கொண்டவள். மிகுந்த பொறுமைசாலி. தாயிடமிருந்து தையல் வேலையைக் கற்றுக் கொண்டவள். சனி, ஞாயிறு, போயா விடுமுறை நாட்களில் அவளது தையல் வருமானம் நாளொன்றுக்கு இருநூறு ரூபாவுக்கு குறையாது. தையலுக்கு தேவையான கலர் நூல்கள், பொத்தான், தெறிகள், கூக்குகள் சகலவற்றையும் மெசின் ஊசிகளையும் நிறையவே வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாள். சிறுவயதிலேயே தாய் தைக்கிற உடுப்புகளுக்கு பொத்தான் தைத்தல், தெறிகள் தைத்தல் ஆகிய வேலைகளை மனமுவந்து கற்றுக் கொண்டவள். கை தையல் வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும்... வாய்... பாடமாக்க வேண்டிய இலக்கியப் பாடத்திலுள்ள பாடல்களை மனனஞ்செய்து கொண்டேயிருக்கும். சைவ சமய பாடத்தில்- விவேகானந்த சபை நடாத்தும் பரீட்சையில் முதற்பிரிவில் சித்திபெற்று பல தராதரப் பத்திரங்களுக்குச் சொந்தக்காரியாகத் திகழுகிறாள். அவளது தையல் வருமானப் பணத்தை தாய் தொடுவதேயில்லை. ஒரு உண்டியல் வாங்கிக் கொடுத்து அதற்குள்ளே சேமித்து வைக்கும்படி - தாயாரின் ஆலோசனையைப் பின்பற்றி நடக்கின்றாள்.

வீட்டுச்சாப்பாட்டுச் செலவுக்கும், பிள்ளைகளின் இதர செலவுகளுக்கும் விமலாதான் வழிவகை செய்கிறாள். தந்தையின்றி வாழ்கின்றனர். சிக்கனமாக வாழ்வதனால் கடன் என்ற ஒரு சொல் இல்லாமலே தமது வாழ்க்கையைக் கெட்டித்தனமாகச் செலுத்துகின்றனர். தோட்டத்தில் கிடைக்கும் மரக்கறிகள் விற்கிற காசே நாளொன்றுக்கு ஐம்பது ரூபாவுக்கு குறையாமல் கிடைக்கும். அது சீனி, தேயிலை, பால்மா, மிளகாய், மல்லி, வெங்காயம், பூடு, தேங்காய், எண்ணெய் வாங்க உதவும்.

விமலா "உழைப்பனவிலும் பார்க்க, ஒறுப்பனவு மேல்" என்ற கூற்றின்படி பிள்ளைகளையும் பழக்கி வைத்திருக்கிறாள்.

அவர்கள் வாழும் கிராமத்தில்- 'கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம்', 'சிக்கனச் சேமிப்பு, கடன்திட்டம்' என்ற நல்ல கைங்கரியத்தையும் நடாத்தி வருகின்றது. அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்டிருக்கின்றது. அதில் சேமிப்புச் செய்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வருடாந்தக் கூட்டத்தில் பாராட்டுப் பத்திரம் வழங்கிச் சிறப்பிப்பார்கள். அதன் தலைவர், செயலாளர், தனாதிகாரியாக ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்கள் தன்னலமற்ற சேவை செய்கின்றனர்.


ராகுலனும், பிறேமாவும் ஒற்றுமையாக தமது சேமிப்பு விடயத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தினர். குருவி சேகரித்துக் கூடு கட்டுவது போல- தமது சேமிப்பில் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கிறது என்று கணக்குப் பார்த்து அகமகிழ்ந்து போவார்கள்.

இப்படியே வருடங்கள் ஓடி மறைந்தன. ராகுலன் தனது பட்டப் படிப்பை யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்கிறான். பிறேமாவும் ஏ. எல் பரீட்சை எழுதி விட்டாள். நிச்சயம் திறமைச் சித்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறாள்.

இப்போ தென்னமரங்களும் காய்க்கத் தொடங்கி.. அவர்களது வீட்டுத் தேவையையும் பூர்த்தி செய்து- மாதத்தில் கிளியண்ணை கடைக்கு 50 தேங்காய் வீதம் விற்கின்றனர். அவர் ஒரு தேங்காய் எண்பது ரூபாவுக்கு வாங்கி நூறு ரூபாவுக்கு விற்கிறார். செவ்விளநீரும் குலைக்கணக்காக காய்த்துத் தொங்குகிறது. வளவிலுள்ள பயன்தரு மரங்கள் காய்க்கத் தொடங்கியதும்- இன்னுமின்னும் பயிர்ச்செய்கை ஆர்வம் அதிகரித்தது. மாலை நேரங்களில் அயலில் வசிக்கும் வசதிகுறைந்த பிள்ளைகளுக்கு கணிதம், ஆங்கிலம், விவசாயம் ஆகிய பாடங்களை அண்ணனும், தங்கையும் மேற்கொண்டிருந்தனர். அதனால், அயலவர், உறவினர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றனர். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்" என்ற உண்மையை மற்றவர்களும் உணரும்படி வாழ்ந்து செயல்முறையில் காட்டினர்.

தமையனிடம் ஒரு சைக்கிள், தங்கையிடம் ஒரு சைக்கிள். அவ்வளவுதான். ஆடம்பர உடுப்புகளோ... கையடக்கத் தொலைபேசியோ, மோட்டார் சைக்கிளோ கிடையாது. அவர்களோடு ஒத்த வயதினர் கல்வியில் முன்னேறமுடியாது போனாலும்... மோட்டார் சைக்கிள்+ கைப்பேசி+ ஆடம்பர உடுப்புகள் என வெளிநாட்டில் அண்ணன்மார் பனிக்குளிரில் உறைந்து- கஷ்டப்பட்டு உழைத்து அனுப்பும் பணத்தை துஷ்பிரயோகம் செய்து ஊதாரிகளாக உலாவருகின்றனர். வாழ்வின் உயர்வுக்கு வறுமை ஒரு காரணம் என்பதனை உணர்ந்தவர்கள் சீரான- செழுமையான வாழ்க்கை நெறியைக் கடைப்பிடிப்பர்.

கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம் ஆண்டு தோறும் பங்குனிமாதத்தில் வருடாந்தக் கூட்டமும்- விளையாட்டுப் போட்டியும் நடாத்தி வருகின்றது. அது மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும். முதல்நாள் விளையாட்டுப் போட்டி, இரண்டாம் நாள் பகிரங்க கூட்டம், சென்ற கூட்ட அறிக்கை தொடக்கம் வரவு செலவு கணக்கு வாசிக்கப்படும். மூன்றாம் நாள் பயிர்ச்செய்கைக் கண்காட்சியும் வெற்றி பெற்றோருக்குப் பரிசளித்து, பாராட்டுப் பத்திரமும் வெற்றிக்கிண்ணங்கள்- விருதுகள் வழங்கப்படும். அவர்களுள் முன்னிலை வகித்தவர்கள் ராகுலனும் பிறேமாவும் என்று சொல்லவும் வேண்டுமா? விளாத்தி மரத்தில் தோடம் பழக் கிளையை ஒட்டி அதில் காய்த்த பழங்கள் சில பார்வையாளர்களின் மனதைத் தொட்டது. இருவருக்கும் வழங்கப்பட்ட பத்திரத்தில்... "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்ற வாசகம் கொட்டை எழுத்தில் இடம்பெற்று இருந்தது. ○

# பிரவீனா

கேக் ஐசிங்கும் , போண்டலும்

செய்து கொடுக்கப்படும்

அனைத்துவிதமான பன்னை பொருட்களும்

வேண்டிய வடிவிலும் வண்ணத்திலும்

பெற்றுக்கொள்ளலாம்



விசேட கழிவுகள் வழங்கப்படும்

0764796618

புதுத்தோட்டம் , தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை.

# நிழல்

வ. ரொபின்
புன்னாலைக்கட்டுவன்



நாளைக்கு பாடசாலை விடுமுறை என்பதால் அதிக நேரம் தூங்கலாம் என்று எண்ணிக்கொண்டே வாசித்துக் கொண்டிருந்த கதைப் புத்தகம் கைநழுவி கீழே வீழ்ந்ததை மறந்து உறங்கிவிட்டேன். மிகவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து கை, காலை முறுக்கி அலுப்பெடுத்துக் கொண்டு மீண்டும் பெட்சீற்றை இழுத்துப் போர்த்திக்கொண்டு ஓலைப்பாயில் பாம்புபோல சுருண்டு படுத்துக்கொண்டேன். வீட்டு விறாந்தையில் கிடந்த சீனியப்பு புகைத்துக்கொண்டிருந்த சுருட்டுப்புகை வயித்தைக் குமட்டியது. நித்திரை வெறியில் சரியான நேரத்தைக்கூட பார்க்கவில்லை.

காலை ஆறு மணியிருக்கும் விடிய வெள்ளணவே எழும்பி வீட்டு வேலைகளை செய்து கொண்டிருக்கும் அம்மா முத்தம் பெருக்குவதும், சட்டிபானை கழுவுவதும் அரைத்தூக்கத்தில் என்னுடைய காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அப்பா கிணற்றில் தண்ணி அள்ளுகிறார் என்பதை கிறீச்... கிறீச்... என்னும் உளண்டிச் சத்தம் நிருபித்துக்கொண்டிருந்தது.

விடிய வெள்ளணவே வழக்கத்துக்கு மாறாய் ஏதோ ஒரு சத்தம்  என் காதில் விழுகிறது. இந்தச் சத்தம் என்னவாக இருக்குமென்று எண்ணுகையில் என் இதயம் படபடக்கத் தொடங்கியது. ஏன்? இந்தச் சத்தம் என் நெஞ்சில் ஒரு படபடப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அந்த சத்தத்தைக் கூர்ந்து செவிமடுத்தேன். ஆம் மரம் கொத்தும் சத்தம்தான். பக்கத்து வீட்டு குஞ்சண்ணை வீட்ட மரம் தறிக்கிறாங்கள் போல என்று என் மனதை சமாதானம் செய்து கொண்டேன். இல்லை... இல்லை... அந்தச் சத்தம் இன்னும் பலமாக என்காதில் ஒலித்தது. அது எங்கட முற்றத்து வேம்பு, நான் ஊஞ்சலாடிய வேம்பு, தோழர்களோடு கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடிய நிழல், கெந்தி விளையாடிய இடம், குச்சி முறிச்சு பல்துலக்கியது, நுளம்புக்கு வேப்பம் இலையும், கொட்டையும் சேர்த்து புகைபோட்டது, பூவில் சுட்ட வடகம், வெள்ளிக் கிழமைகளில் நாவூறுக்கு கட்டிய வேப்பம் குழை இந்த மரத்தில் தான் முறிச்சது, காளி கோயில் வள்ளியம்மா கலையாடிய வேப்பம் குழை... என்று மனதுக்குள் நினைத்தவாறே முற்றத்துக்கு ஓடி வந்தேன்.

“ஐயோ! நிப்பாட்டுங்கோ!” என்று சொல்லும் போதே கடைசி கொத்தோடு கம்பீரமாய் நிழல் தந்து நின்ற எங்கள் வீட்டு குடை மரம் சரியத் தொடங்கியது. அந்தக் காட்சியை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. எதற்கு இதைத் தறிச்சீங்கள்? என்று அப்பாவைக் கேட்டபோது அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வருவதற்குள் கண்களில் கண்ணீர் சொரிய ஆரம்பித்தது... அப்பா!.... அப்பா!... என்ன நடந்தது சொல்லுங்கோ? என்று திரும்பத் திரும்பக் கேட்டேன். “அப்...பம்மா... அப்பம்மா...” என்று வார்த்தைகள் முழுமையாகாமல் அப்பாவின் வாய் திக்கு முக்காடியது... “அப்பம்மாக்கு என்ன நடந்தது? ஏன் அப்பா அழுகுறீங்கள்” என்று அப்பாவை கட்டியணைத்து உலுப்பிக் கேட்டேன்... “அப்பம்மா செத்துட்டா... தங்கம்” என்று கூறிக்கொண்டே என்னை இறுக்கி அணைத்துக்கொண்டார்...

எப்போதுமே தனது பொக்கை வாயால் எனக்காய் பல கதைகள் கூறுவதும், நான் சாப்பிடாமல் அடம் பிடிக்கும் அந்தக் கணங்களில் அன்பாய் சோறூட்டி என்னை அரவணைப்பதும், புளியங்கொட்டை பிளந்து திண்ணையிலே கரியால் தாயக்கோடு கீறி என்னோடு தாயம் விளையாடுவதும், சுருட்டு வாங்கத் தாற காசில மிச்சத்துக்கு புளுட்டோ ரொபி வாங்கச் சொல்லுறதும் நீதானே பாட்டி என்று கிழவியின் நினைவுகள் என் நெஞ்சில் ஆர்ப்பரிக்க கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்தது. “அழாத பிள்ளை... எல்லாம் விதி... அப்பம்மா கடவுளிட்ட போட்டா” என்று சொல்லி என்னை ஆறுதல்படுத்தி எனது தலைய

வருடிக்கொண்டார் அப்பா. என்னால் அப்பம்மாவின் இறப்பை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஏனென்றால் எனதுலகில் என்னைத் தேவதையாகக் கொண்டாடிய கிளவி அவள் தான். எனக்கு பால் அப்பம் பிடிக்கும் என்று நிறையப் பால் விட்டு அப்பம் சுட்டுத் தந்த அப்பம்மா. நான் கிழவி என்று செல்லமாகத் தடவினாலும் பொக்கை வாயால் சிரித்து விட்டு தன் மடியில் இருத்திக்கொள்வாள் என்னை.

திடீரென்று நினைவுகளிலிருந்து நீங்கி அப்பம்மாவை இப்பவே பாக்க வேணும் என்று விம்மி... விம்மி... அழுதுகொண்டே அப்பம்மா வீட்ட போறதுக்கு தயாரானேன். தறித்து விழுந்த மரத்தைச் சுற்றி ஒரு காகம் பறந்துகொண்டே இருந்தது... அந்த மரத்தில் கட்டியிருந்த அதன் கூட்டில் முட்டையிட்டு அடை காப்பதற்குள் அதன் கூடு கலைந்தபோனதைப் போல நமக்கு நிழலாயிருந்த வேம்பும், எனக்கு நிழலாய் இருந்த கிழவியும் என்னைவிட்டுப் பிரிந்து போனார்கள்.

இந்தக் கதையை நான்காம் மாடியில் இருந்து எனது இரண்டு பிள்ளைகளுக்கும் சொல்லிக்கொண்டிருக்கின்றேன்... என்னை அறியாமலே கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்கிறது... இது பனி காலம் பனிமழை கொட்டத் தொடங்குகிறது... நினைவுலகில் பின்னோக்கிச் சென்ற நான்... மீண்டும் நினைவுக்குத் திரும்புகையில்... என் தொலைபேசி ஒலிக்கிறது...

“ஹலோ... ஹலோ... பிள்ளை அம்மா கதைக்குறது விளங்குதா?”

“ஓம் அம்மா சொல்லுங்கோ... சுகமா இருக்கிறியளோ?...”

“ஓம்பிள்ளை... நாளைக்கு அப்பம்மாட 30வது நினைவு தினம். வழமைபோல நீ அனுப்பின காசுக்கு மரக் கண்டுகள் வாங்கியாச்சுப் பிள்ளை...” என்று சொல்வதற்குள் அழைப்பு துண்டிக்கப்படுகிறது. தங்கத்தின் கணவர் வேலை முடிந்து உள்ளே வருகிறார்... இவள் வேலைக்காக வெளியே செல்கிறாள்...

நன்றி : உதயன்




# ஒவ்வாப் பெருஞ் சத்தங்கள்

அழ. பகீரதன்

விளங்கா மொழியில்
அலறும்
ஒலிபெருக்கிச் சத்தம்
செவிப்பாறையைக் கிழிக்கும்
ஒருபக்கம் சமஸ்கிருதம்
இன்னொரு பக்கம் அரபு
மறுபக்கம் பாளி...
மன இறுக்கம் இருக்க
ஒப்புமோ மனது?

தனக்குத் தனக்கு எனத்
துடுக்குத் தனத்தில்
பிடுங்குப்பட்டு
ஆளணி கேட்டு
ஆதரவு காட்டி
மார்க்கங்களில் சேர்ப்பு
தெருவுக்கொரு கோயில்
பெருந்திருவிழாவெனில்
அலறுகிற ஒலியன்றி
ஆன்ம இலயிப்பிற்கு
இடமேதுமற்ற
கைப்பொருள் அழிவன்றி
பயனுண்டோ மக்கட்கு?

எம்மதத்திலும்
இறைநாட்ட மில்லை
தம்மதத் தலைக்கனம்
மெத்திட மெத்திட
சித்தத்தில் தெளிவில்லை

புத்தர் ஞானத்தின்
சாரம் மறந்தனர்
நபிகளின் நாட்டம்
நவின்றிட மாட்டார்
யேசுவின் சீடர்
நேசியார் நேயத்தை
விவேகானந்தர் விளக்கம்
விபரமாய் புரியார்
சடங்கெனக் காட்டித்
தடம் பதித்தொன்றையே
மீண்டு மீண்டு
ஒப்புவர் தெளிவின்றி
சத்தம் பெருகுதலன்றி
சாத்தியம் ஏது?

புத்தியில் எவர்க்கும்
புரிந்திடா மொழியில்
காலத்துக்கொவ்வாப்
பெருஞ்சத்தங்கள்
செவிப்பாறையைக்
கிழிக்கும் நிலை
மாற்றிட முயலும்
தெளிவே ஞானம்
என அறியாரோ!

*2019*
வளரி மின்னிதழ்


# புத்தகப் பண்பாட்டு பேரவை

## மெய்ப்பொருள் காண்பது அறிவு






puththaka.p.v@gmail.com

இல. 68 நீதிமன்ற வீதி, மல்லாகம்.

**076 393 4659**

# உயிர் மண்

மல்லிகை சி. குமாரி



“தெய்வான நீ செரமப்படாத... என்னால எழும்பி நடக்க முடியும். கைய விடு நா... நடக்குறே’’என்ற சங்குநாதன் கட்டிலின் விளிம்பில் இருந்தபடி கால்களை நிலத்தில் ஊன்றி எழுந்து நடக்க முயன்றாலும் தெய்வானையின் உதவி அவருக்கு தேவையாகத்தான் இருந்தது. தெய்வானையின் தோளில் தன் வலதுகையை போட்டுக்கொண்டவர்...

“யம்மா தெய்வான என்ன வாசல் வரைக்கும் வான்னு வற்புறுத்தி எழுப்பினியே அப்படி என்னம்மா விசேசம்?”- ஆர்வத்தோடுக்கேட்டார்.

“அப்பா ஒங்க பேரன் அதான் நம்ப சின்னண்ணனோட மகன் சுவேந்தன்தான் இந்த முறை நடக்கும் காமன்கூத்துல மன்மதன் வேசம் கட்டி இருக்கான். வந்து பாருங்களே மன்மதராஜனே வந்த மாதிரி இருக்கு” என்றவள் “அதுமட்டும் இல்லப்பா ரதி வேசம் கட்டியிருப்பது யாருன்னு தெரியுமா?”

“சொல்லுமா சொன்னாத்தானே தெரியும்’’ ஆவலோடு கேட்டார், சங்குநாதன்.

“யாருமில்ல அது வந்து நம்ப கணேசுமாமாவோட எளையமகன் சுரேசுதான். அவன் செவப்புக்கும் அதுக்கும் அந்த ரதி தேவியே நேரா வந்து நிக்கிற மாதிரி இருக்கு ரதி, மன்மதன் வேசம் இந்த ரெண்டு பேத்துக்கும் எவ்வளவு பொருத்தமா இருக்குது தெரியுமா?’’

என்று சொல்லும் போதே வாய் ஊறப் போனாள் தெய்வானை.

அதே நேரம் இடையில் வந்த சங்குநாதனின் மனைவி சிவகாமி தெய்வானையை பார்த்து,

“இந்தாப்புள்ள நீ பெரியப்பாவ கூட்டிக்கிட்டு வாசலுக்கு போ. நா விவுதி தட்ட எடுத்துக்கிட்டு பினாலயே வர்றேன்” என்று சொல்லிவிட்டு சாமியறைக்கு போனார். இந்த சிவகாமி சங்குநாதனுக்கு இரண்டாந்தாரமாக வாக்குப்பட்டவள். சங்குநாதனின் மூத்த தாரம் இருந்த வரைக்கும் அவளுக்கு எந்த குழந்தை குட்டியும் இல்லை. அதேநிலைமைதான் இன்றைக்கு சிவகாமிக்கும்.ஆனால் தெய்வானை இந்த வீட்டில் இருப்பதால் சிவகாமிக்கோ சங்குநாதனுக்கோ பிள்ளையில்லையே என்ற வருத்தமேயில்லை.

தெய்வானை யாரு?...

சங்குநாதனின் தம்பி அழகிரியின் மகள்தான்.

தெய்வானைக்கு விபரம் தெரிவதற்கு முன்பே இவளின் தந்தை அழகிரி இறந்துவிட்டதால் இவளுக்கு எல்லாமே பெரியப்பா சங்குநாதன்தான். விதவையான இவளின் அம்மா தைலம்மா, பெரியண்ணன் வையாபுரி சின்னண்ணன் பொன்னையன் மற்றும் எல்லா உறவுகளும் இருந்தாலும் இவளுக்கு பெரியப்பா மேல்தான் உயிரு.

“இந்தாபாரு தெய்வான உன்ன விட்டுட்டு ஓம்புருசன் இன்னொருத்திய கூட்டிக்கிட்டு ஓடிட்டானேன்னு நீ கவலப்படாதம்மா. நம்ம மதுரவீரன் சாமியும் அப்படித்தான் பொம்மியம்மாவ விட்டுட்டு வெள்ளையம்மாங்கிற பொண்ணோட போயி

சேந்துட்டாரு. அப்புறம் அவரு தெய்வமாகி பொம்மியம்மாவ சேத்துக்கிட்டாருதானே நீ கவல படாத. இப்பைக்கு அவனோட நெனப்ப விட்டு வீசிட்டு தைரியமா இரு. அவன் எப்படியும் ஓ காலடிக்கு வந்துதான் சேருவான்...'' என்று சங்குநாதன் இவளுக்கு ஒரு நம்பிக்கையையும் தைரியத்தையும் தந்ததால்தான் தெய்வானை புருசன் கட்டிய தாலிக்கு மரியாதைக்கொடுத்து வயது முதிர்ந்த பெரியப்பா சங்குநாதனுக்கு ஆதரவாகவும் ஊன்று கோலாகவும் இருந்து வருகிறாள். அவள் சங்குநாதனை அழைத்துக்கொண்டு நிலைப்படியைத் தாண்டி வாசலுக்கு வந்ததும் வாசலில் கூடி நின்றவர்களில் ஒருவன் ''இனிமே யாரும் சத்தம் போடாதீங்க பெரியப்பா வந்துட்டாரு'' என்றான். இங்கு பலபேர் சங்குநாதனை பெரியப்பா என்றுதான் அழைப்பதுண்டு. எனவே பெரியப்பாவான சங்குநாதன் தெய்வானையின் உதவியோடு ரதி-மன்மதன் நிற்கும் இடத்திற்கு போனதும் ரதி-மன்மதன் வேசங்கள் கட்டிய சுவேந்திரனும் சுரேசும் கையெடுத்து பணிவுடன் சங்குநாதனை வணங்கினர். அவர்களை தடுத்த சங்குநாதன் ''வேணாங்க நீங்க என்ன வணங்ககூடாது, நான்தான் உங்களை வணங்கணும், ஏன்னா நீங்கெல்லாம் தெய்வப்பிறவிங்க'' என்றார். அதேநேரம் வீட்டுக்குள் இருந்து விபுதி தட்டோடு வெளியில் வந்த சிவகாமி தட்டை சங்குநாதன் கையில் பிடிக்க சொல்லிக்கொடுக்க அவர் அதை வாங்கிக்கொண்டார். அவரின் கைகள் நடுங்கத் தொடங்கின. உடனே தெய்வானையும் அவரோடு சேர்ந்து தட்டைப் பிடித்துக்கொண்டார். விபுதிக்கு மத்தியில் கற்புரத்தை ஏற்றி ''கொழந்தைகளுக்கு நம்ம கொலதெய்வத்த நெனச்சி விபுதிய வச்சி விடுங்க'' என்றாள்.

சங்குநாதனும் முப்பது முப்பத்தெட்டுக்கோடி தேவர்களையும் அழைத்ததோடு இந்த தோட்டத்தில் குடிகொண்டிருக்கும் விநாயகன், முருகன், மாரி, காளி மற்றும் எல்லை தெய்வங்களயெல்லாம் வேண்டி பின் இறுதியாக தன் தம்பி அழகர்சாமியையும் அழைத்தவருக்கு அருள் தட்டி விட்டது போல்...

''மக்கள்களா நா சொல்லுறத கேளுங்க ஒங்களுககு எந்த தீங்கினையும் நேராத வண்ணம் நீங்க ஊர்வலமா எங்க ஆடிப்பாடி போனாலும் நா ஒங்களுக்கு தொணையா இருந்து காப்பாத்துவேன்... இது சத்தியம் முக்காலும் சத்தியம்!'' என்று உறுதியாக சொல்லிவிட்டு எரியும் கற்புரச்சுடருக்கு மேல் கையை நீட்டி சத்தியம் செய்தவர் பின் சுயநினைவிற்கு வந்தவர், ரதிக்கும் மன்மதனுக்கும் நெற்றியில் விபுதியைத் தொட்டு வைத்தார்.

''மாமா அப்படியே ஒங்க கையால எங்களுக்கும் விபுதிய வச்சி விடுங்க'' என்றான் காமன்கூத்து பாட்டுமாஸ்டர் மாரிமுத்து. மாரிமுத்து மாஸ்டர் காமன்கூத்து படல்களை மட்டுமல்ல அரிச்சுனன் தவசு, பொன்னர் சங்கர், நல்லதங்காள் பாடல்களோடு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடக பாடல்களையும் தியாகராஜபாகவதர், சின்னப்பா போன்றோர் பாடிய பாடல்களையும் இன்றும் வீட்டில் தன் பழைய ஆர்மோனிய பெட்டியை எட்டுக்கட்டைக்கும் இழுத்துக்கொண்டு பாடுவார். இவரின் நரைத்த தலைமுடி முன்பக்கம் உதிர்ந்து பாதி தலை வரை வழுக்கை விழுந்திருந்தாலும் பின் பக்கம் பிடரி வரை நீட்டிக்கொண்டிருக்கும் மயிர் பாகவதர் கட்டை நினைவு படுத்தி கொண்டுதான் இருக்கிறது.

''மாரிமுத்து இந்த காலத்து பாட்டு என்ன பாட்டா? எல்லாமே கீறல் விழுந்த கிரம்போன் தட்டு போலத்தான் எதுவுமே வெலங்காத பாட்டாத்தான் இருக்கு. நீ நம்ம காலத்து தியாகராஜபாகவதர் பாட்ட பாடுப்பா. அதுத்தான் பாட்டு...'' என்று மாரிமுத்துவை அவரின் வயதை ஒத்த சில பழைய கட்டைகள் பாடச்சொல்லி கேட்பதுண்டு இதில் சங்குநாதனும் அடங்குவார்.

''மாரிமுத்து நாளைக்கு நீயோ நாங்களோ நீங்க செத்துபோயிட்டா அப்பறம் இங்க இந்த மாதிரி பாட்ட கேட்கவோ இல்லாட்டி ஓம்மாதிரிப்பாடுவோ ஆளேஇருக்காது. இதுவெல்லாம் முடிஞ்சு போயிரும் போல இருக்கு''என்பார் சங்குநாதன். அத அந்த பழைய கட்டைகளும் ஆமா ஆமானனு...

இப்பவும் மாரி குரலில் ஓர் இனிமைதான்

விபுதியை விரல்களில் எடுத்த சங்குநாதன்... ''நீ கிட்ட வா மாரிமுத்து'' என்று மாரிமுத்துவை அருகில் அழைத்து நெற்றியில் விபுதியை இட்டவர் ''நீ இந்த காமன்கூத்து பாட்ட ஒன்னோட மட்டும் அழிஞ்சிடாம இப்ப இருக்குற இந்த சின்னஞ் சிறுசுகளுக்கும் சொல்லிக்கொடு வேணுமுண்ணா இந்தகூத்த நீ அப்படியே ஒரு பெரியக்கொப்பியில எழுதி வை'' என்றார்.

''மாமா அந்த வேலையெல்லாம் நடந்துக்கிட்டுத்தான் இருக்கு'' என்ற மாரிமுத்து ''என்னோட மூத்தப்பேரன் அந்த தினெஷ் இருக்கானே அவன் இந்த பாட்டை எல்லாம் என்னமோ சீடீன்னு ஒன்னு இருக்காமே... இதல்லதானே எடுத்து வச்சியிருக்கிறான்... அதமட்டுமில்ல இன்னும் பழையக் கூத்துப்பாட்டையெல்லாம் எடுத்துதான் வச்சிருக்கிறான்'' என்றார். இதைக்கேட்ட சங்குநாதன் ''இதைக் கேட்க ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்றான். ''பெரியப்பா ஒங்க காலத்தில கிரம் போன் தட்டுத்தான் பெருசா இருந்திச்சி. ஆனா இப்ப சீடிதட்டு வந்திருச்சி. காலம்மாறிபோச்சு. விஞ்ஞானம் வளரவளர இன்னம் என்னன்னமோ மாறபோவுது'' என்றான் செல்லப்பாரதி. இந்த இளைஞன்தான் போன முறையும் சிவபெருமான் வேசங்கட்டியவன். இந்தமுறையும் இவன்தான் இதே வேசத்தைக் கட்டபோறான். ''சீடி.. டெக். கொம்யுட்டர்.. லெக்டொப்.. செல்போன் என்று இதுக்குள்ளையே வீண் பொழுதை இன்றைய இளைஞர்கள் கழிக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எம்மை விட்டு தொலைந்துப்போன கலை கலாச்சாரத்தை தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த காமன் கூத்திலும் பல இளைஞர்கள் இன்றைய நிலையில் கொழும்பில் வேலை செய்யும் ஒருவன் தன்னுடன் வேலை செய்பவர்களை பார்த்து 'வாங்கடா மச்சான்களே எங்கத் தோட்டத்தில காமன் கூத்து நடத்தப்போறாங்க நீங்களும் வாங்க. போய்ப் பார்த்துவிட்டு வருவோம்' என்று அதில் சிலரையாவது தோட்டத்துக்கு அழைத்து வந்து காமன் கூத்தை காட்டுவதில் ஆர்வம் உள்ளவறாக இருக்கிறார்கள்.

நிச்சயமாக அவர்கள் வடபகுயையோ அல்லது கிழக்கு பகுதியை சேர்ந்தவர்களாகவோதான் இருப்பார்கள்... எனவே இந்த கூத்துக் கலையெல்லாம் என்றைக்கும் அழியாது'' என்றான் செல்லபாரதி. அவனின் பேச்சு சங்குநாதனின் மனதை குளிர வைத்தது. அவர் தன்முன்னால் வந்து நின்ற அனைவருக்கும் திருநீறு வைத்துஅனுப்பினார் ''எங்க பெரியப்பா எல்லாருக்கும் விபூதியை பூசிவிட்டுட்டாரு'' என்ற வெங்கடேசு...தன் இடது பக்க தோளில் கிடந்த தப்பைமார்ப்பு பக்கம் திருப்பி எடுத்து இடதுபுற மார்ப்பு பகுதியில் பதிய வைத்து இடதுஅக்குள் பகுதியில் அழுத்திக்கொண்டு இருகை விரல்களிலும் அடிப்பதற்கு வசதியாக தப்படிக்கும் பிரம்புகளை பிடித்துக்கொண்டார். அதேபோல இவரின் கோஸ்டியான மற்ற இருவரும தயார் நிலையில இருநதனர். மாரிமுத்துமாஸ்டரும்... ஒரு புதிய தெம்போடு பிள்ளையார் துதியைப் பாட ஆரம்பித்தார்.

''பிள்ளையார் அப்பனே - சிவன்

பெற்றெடுத்த பெரு மகனே

அறிஞ்சமட்டும் நாப்பாட

தெரிஞ்சவிங்க மனம் பொறுக்க

ஆடுகின்ற பிள்ளையர்களுக்கு

அழுக்கு ஏதும் நேராம யான

மொகத்தோனே – எங்க மாணிக்க பிள்ளையாரே...''

என்று ஓங்கி குரலெழுப்ப... அதை தொடர்ந்து தப்ப மனேஜர் வெங்கடேசுவும் இவருடன் சேர்ந்த மற்ற இருவரும் தப்படியொசையை எழுப்ப...

''அடே...! அடுத்த தோட்டத்துக்காரனுங்க இந்தமாசி மாத காமன் கூத்த தொடங்கிட்டானுங்கடோ....'' என்று பக்கத்து தோட்ட மக்களும் சொல்லுமளவுக்கு இவர்களின் தப்போசை ஓங்கி ஒலித்தது.

''வருசத்தில்மாசி மாசம்

வளர் பொற தேதிப்பார்த்து

அமாவாச நாள்கழித்து

அடுத்து வரும்நாள் மூன்றாம்

நாள் பார்த்து...''

என்று காமன் பாடல் தொடரை மாரிமுத்து இழுத்து பாட தப்படி சத்தமும் ஒலிக்க இந்த தப்படிக்கு ஏற்றவாறு ரதியும் மன்மதனும் முன்னும்பின்னுமாக அழகாக தங்கள் கால்களை எடுத்தாட....

முதற் படி அரிசியை சங்கநாதன் வீட்டிலேயே வாங்கிக்கொண்டு

அடுத்தடுத்த வீடுகளுக்கும் பாடல் ஆடல் தப்போசையோடு அவர்கள்

போய்க்கொண்டிருந்தார்கள். லயத்து மக்களும் அதில் கலந்துக்கொண்டார்ககள்.

... ரதியே ரதிக்கிளியே

ரதிக்கேத்த மன்மதனே...''

அப்பாடல் தொடர... பறை ஓசை முழங்க ரதி மதன் ஆட்டமும் களைக்கட்டியது.

இந்த லயத்தை விட்டு எதிர் லயத்துக்குப் போகும்வரை அதையே பார்த்துக்கொண்டிருந்த சங்குநாதன் அதன்பின் தெய்வானையின் உதவியோடு வீட்டுக்குள் போய் கட்டிலில் சாய்ந்தர்...

பெரியப்பா ரதி மதன் வேசங்கட்டிய நம்ம சுவேந்திரனையும் சுரேவையும் பார்த்தீங்கத்தானே அவுங்க ரெண்டப்பேரு அப்படியே ரதிமதன் நேராவே வந்த மாதிரியியே இருக்காங்கத்தானே?''என்ற தெய்வானை ''அவுங்க ரெண்டுபேத்துக்கும் ஊரு கண்ணேபட்டுடும் போல இருக்கு'' என்று வியந்து சொன்னவள்... ''இருங்க பெரியப்பா ஒங்களுக்கு டீ போட்டு எடுத்துக்கிட்டுவர்றேன்... ஆனா... கொஞ்சம சொணங்கும்'' என்றவள் அங்கிருந்து செல்ல விபூதி தட்டோடு அங்கு வந்த சிவகாமி சாமி படத்துக்கு முன்னால் உள்ள திண்ணையில் விபூதி தட்டை வைத்துவிட்டு... சங்குநாதனைப் பார்த்து ''இந்த முறை வேஷங்கட்டியதில பாதிப்பேரு புது பொடியன்கள்தான்... தூதுவன்

கூட ஒங்க கூட்டாளி ஜெபமாலயோட மகன் போல்ராஜ்தானாம்'' என்றாள்.

''பாரு எல்லாரும் சேர்ந்து இந்த கூத்த வளர்ப்பதில் எவ்வளவு ஆர்வமா இருக்காங்க என்பத நினைக்க எவ்வளவோ சந்தோஷமா இருக்கு'' என்ற சங்குநாதன் நிமிர்ந்து உட்கார்ந்தார். சங்குநாதன் இந்த மாதிரி அந்தி நேரத்தில் பிளாங்கட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு கண்ணயரும் பழக்கம் கொண்டவர்... ஆனால் இப்பொழுது...

''இந்த போல்ராஜ் கல்லரப் பெருநாள் அன்னிக்கி நடந்த ஞானசௌந்திரி நாடகத்தில இவன்தான் ஞானசௌந்திரியா நடிச்சான்'' என்று சொல்லிக் கொண்டே குசினிப்பக்கம் நடந்துப் போனாள்.

சங்குநாதன மீண்டும் கட்டிலில் சாய்ந்தார். ஆனால் உறக்கம் வரவில்லை. உள்ளத்துக்குள் உறங்கிக் கொண்டிருந்த அந்த அழகர்சாமி- இவரின் உடன் பிறப்பான அந்த தம்பியின் நினைவு விழித்துக் கொண்டதால்... இவரால் எப்படி உறக்கம் கொள்ள முடியும்.

0

''அண்ணே... இவ்வளவு காலமா நாம வாழ்ந்த அந்த எடத்த விட்டுட்டு இங்க வந்துட்டொமின்னு கவலையா இருக்கா? எங்களுக்கும் கவலத்தான். அந்த கொத்மல விக்டோரியா அணைக்கட்டு ஆரம்பிச்சதாலத்தான் நாம நம்ம பொறந்த இடத்த விட்டுட்டு ஓடித்திரிந்த தோட்டத்த விட்டுட்டு கும்பிட்ட மாரியாத்தாக் கோயில் ஆத்தங்கர முருகன் ஆலயம். காட்டுல உள்ள வனத்து சின்னப்பர். நாம... தெய்வம் போல நெனச்ச அந்த காமன் பொட்டல் எல்லாத்தையும் விட்டுப் பிரிஞ்சிட்டு... அல்லோலக்கலலோலப்பட்டு அவசரம் அவசரமா கையில் கெடச்சதை லொறியில அள்ளிப் போட்டுக்கிட்டு இந்த தோட்டத்துக்கு வந்து சேர்ந்திட்டோம். அங்க நாம விட்டு வந்ததெல்லாம்... அப்படியள தண்ணிக்குள்ளப் பொயிருச்சி! நாம எத எத பெருசா எண்ணி பெருமபட்டொமோ அதுவெல்லாத்தையும் தண்ணி விழுங்கிருச்சி...'' என்று கவலையோடு சொன்னான் சங்குநாதனின் தம்பியான அழகர்சாமி.

''அழகரு நாம பாதுகாத்துவந்த பெறுமதி

எல்லாமே... சின்னாப்பின்னமா பொயிருச்சிதாண்டா... ஆனா அந்த காமன்பொட்டல்... அதை நெனைச்சாத் தாண்டா எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. நாம அங்கிருந்து வர்றப்ப அந்த காமன் பொட்டல் திண்ணையில இருந்து ஒரு பிடி மண்ணையாவது கொண்டுவந்திருந்தா... அது என் மனசுக்கு எவ்வளவோ ஆறுதலா இருந்திருக்கும். ஆனா... அதைக்கூட கொண்டு வரல்லையே... நம்ம அப்பா காலத்தில இருந்து இந்த தோட்டத்தில வருசா வருசம் இந்த காமன் கூத்த நடத்துனவுங்க இந்த கூத்த ஒரு தெய்வ கலையா நெனச்சி நடத்தி வந்தாங்க... பாதுகாத்து வளர்த்தாங்க.

நாமலும் வேஷங்கட்டி ஆடினோம். எத்தனப்பேரு... அந்த கூத்த எவ்வளவு அழகா நடத்தினோம். ஆனா நம்மக்கூட வேஷங்கட்டி ஆடின நம்ம ஆளுங்கெல்லாம அந்த நீர் தேக்கத்தால திக்காலுக்கு ஒருத்தரா... பிரிஞ்சிப் பொயிட்டாளுங்களே'' என்று தன் தம்பி அழகர்சாமியிடம் ரொம்ப கவலையாக சொன்னார் சங்குநாதன்.

தன் உடன்பிறப்பு கவலைப்படுவதைப் பார்த்த தம்பிக்காரன்...

"என்னாண்ணே அதுக்கு நாம என்னா செய்ய..? அந்த காமன் பொட்டல் அந்த லயங்கள், கோயில்கள் எல்லாமே தண்ணீயில மூழ்கிப் போன மாதிரி நாம ஒண்ணா நின்னு நடத்தின கூத்துகளும் தண்ணிக்குள்ள மூழ்கிப் பொயிரிச்சேன்னு கம்மின்னு இருக்க வேண்டியதுதான்..'' என்ற அழகர்சாமி...

"அண்ணே இந்த தோட்டத்தில விசாரிச்ச அளவுக்கு காமன் கூத்தன்னு ஒண்ணு நடந்ததாக எந்த தடயமும் இல்லையாம். அப்படி காமன் கூத்தப் பார்க்க இந்த தோட்ட மக்களுக்கு ஆசையா.. இருந்தா.. ரெண்டுத் தோட்டம் தாண்டிப்போய்த்தான் விடிய விடிய அங்கத்தங்கித்தான் கூத்தப்பாத்துட்டு வருவாங்களாம்.'' என்றான்.

அதை கேட்டு சற்று யோசனை செய்த சங்குநாதன்...

"அழகரு இதுக்கு முன்ன நீ சொன்னியே நாம இருந்த தோட்டத்தில நாம நடத்தின கூத்து எல்லாம் நீருக்குள்ளையே மூழ்கிப்பொயிருச்சின்னு... அடே நீயா இப்படி செல்லணும் நம்மளோட கூத்துக் கலையெல்லாம் மூழ்கிப்பொயிரிச்சின்னு சொல்லவேக் கூடாது.. நாம ஏன் அப்படி நெனைக்கணும்...? நாம உயிரு பொழச்சுக் கெடக்குறதுனால... அந்த கூத்த நாம இந்த தோட்டத்தில நடத்தியேக் காட்டணும்!'' ஒரு உறுதியோடு சொன்னார்.

"என்னாண்ணே... இந்த தோட்டத்தில அதுவெல்லாம் சரிப்பட்டு வருமா? அதோட இந்த தோட்டத்தில எவனுக்கும் பெருசா எந்த கலை ஆர்வமுமில்ல.ஏதோ பொம்பள சனங்களுக்கு மட்டும் அதுல கொஞ்சம் ஆர்வம் இருக்குபோல இருக்கு.''என்ற அழகர்

"அது மட்டுமில்ல இது டவுன் ஓரத்து தோட்டம்.... பார், மியூசிக்கல் ஷொவ், சிடி... டெக்கின்னுத்தான் கெடப்பானுங்க... பழைய கலை கலாசாரத்தை மறந்துட்டானுங்கப் போலத்தான் இருக்கு'' என்று அழகர் சொன்னதும்... அவனை ஏறிட்டுப் பார்த்த சங்குநாதன்...

"அப்படியெல்லாம் சொல்ல முடியாது. மங்கிப் போயிருக்கிற அந்த ஆர்வத்தை நாமத்தான் தூண்டி விடணும். வேண்ணான்னு ஒதுக்கித் தள்ளுரவனுங்க பத்துப் பேராயிருந்தா... ஏத்துக்கப் போறனுவுங்க அஞ்சிப்பேராவது இங்க இருப்பானுங்க.'' என்ற சங்குநாதன்... "பாரே நாம மட்டும் இந்த தோட்டத்தில காமனை நட்டு கூத்த மட்டும் நடத்திட்டேமின்னா.... எல்லாருக்கும் ஆர்வம் தன்னாலப் பொங்கி வடிஞ்சிடும்...'' என்றார் .

"அண்ணே நீ சொல்லுறதும் நல்ல யோசனதான், பாதிக்குப் பாதிபேரு கண்டிப்பா ஏத்துக்குவாங்கத்தான்.'' என்ற அழகர்சாமி...

"அண்ணே... அப்படியே இந்த தோட்டத்தில காமன் நடத்தனுமின்னு முடிவுப் பண்ணினாலும் அதுக்கு முக்கியமா ஒண்ணுத் தேவத்தானே..? ''


"அது என்னா அப்படி முக்கியமானது?''

"என்னாண்ணே அப்படிக் கேட்கிற.... அதுதாண்ணே உயிர்மண்ணு...!''

"ஆமாண்டா இதுக்கெல்லாம் முக்கியமானது அந்த உயிர் மண்ணுதாண்டா...'' என்ற சங்குநாதன்.. "ஏண்டாத்தம்பி அத கொண்டவரமுடியாதாக்கும்? எங்கேயாவது ஒரு தோட்டத்தில காமன் எரிச்சப் பொட்டல்ல இருந்து ஒரு பிடி உயிர் மண்ணக் கொண்டு வரவேண்டியதுதானே...'' என்றார். இதைக்கேட்ட அழகிரிக்கு சிரிப்புத்தான் வந்தது.

"அண்ணே அது என்னா மிட்டாயா போய்க் கேட்டதும் அள்ளிக் கொடுக்குறதுக்கு? அது உயிர்

## தாயகம் 101 இதழ்




*தாயகம் 101 வது இதழ் மலையக எழுத்தாளர் மல்லிகை சி. குமார் ஓராண்டு நினைவுச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. அதிக பக்கங்களுடன் வெளிவந்துள்ள இதழ் ஒன்றின் விலை 100 ரூபா மட்டுமே.*

*எங்கட புத்தகம், புக் லாப், வெண்பா புத்தக சாலை மற்றும் மல்லாகம் புத்தக பண்பாட்டு வலையமைப்பிலும் தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயற்பாட்டாளர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.*

ஆசிரியர்
ஆடியபாதம் வீதி.
கொக்குவில்

மண்...''என்றவன்... "என்னண்ணே வெபரம் தெரிஞ்ச நீயே இப்படி சொல்லுற...?

நாம பொறந்து வளர்ந்த ஆத்தக்கரத் தோட்டத்தில... நீ எத்தனையோமொற காமன் கூத்த நடத்திருப்ப.. எப்பவாவது யாரையாவது காமன் எரிச்ச திண்ணையில இருந்து ஒரு பிடி மண்ண அன்னியன் அள்ளிக்கிட்டுப் போக விட்டிருப்பியா? அடுத்தவன் வந்து காமன் எரிச்ச பொட்டல்ல இருந்து உயிர் மண்ண எடுத்தக்கிட்டு பொயிட்டா தோட்டத்துக்கே ஆகாதுன்னு ஒரு ஐதிகம் இருந்திச்சு தானே? அதுக்கு கட்டுப்பட்டுத்தானே எல்லாமே நடந்திச்சி. அதே கட்டுப்பாடுதானே அங்க உள்ள தோட்டங்களிலும் இருக்கும். கட்டுப்பாட்ட மீறி எந்த தோட்டத்திலயும்... வாங்கடா வந்து உயிர் மண்ண அள்ளிக்கிட்டுப் போங்கடான்னு அனுமதிக் கொடுக்கவே மாட்டானுங்க. அவனுங்க உயிர் மாதிரிதான் இந்த உயிர் மண்ணையும் காப்பாத்துவானுங்க. எவனையும் அள்ளவிடமாட்டானுங்க''

அழுத்தமாகவே சொன்னான் அழகர்சாமி.

"ஆமாண்டா நீ சொல்லுறதும் உண்மத்தான்... ஆனா.. இதையெல்லாம் பார்த்தா இங்க காமன் கூத்த நடத்தவே முடியாது போல இருக்கே...''என்று நெஞ்சை தடவியவர்...

"ஏய் அழகிரி... எப்படியும் இந்த தோட்டத்தில நாம காமன நட்டு வச்சி கூத்த நடத்திக்காட்டணும்!''

திடமாகவே சொன்னார் சங்குநாதன்.

"அண்ணெ தெளிவாகத்தான் சொல்லுறிங்களா?'' என்று அழகர்சாமிக் கேட்க... "தமபி எதை நாம அந்த தண்ணிக்குள்ள தோத்துட்டு வந்தோமோ அத நாம இங்க தேடி எடுக்கணும். காமன எப்படியும் ஊண்டனமின்னு என்ற வைராக்கியம் என் மனசுக்குள்ள நெலக்குத்தி நிக்கிது. ரெண்டு நாளைக்கிமுன்ன... நானே மன்மதன் வேஷங்கட்டி ஆடுறமாதிரி ஒ கனவு. ஆனா... அந்தக் கனவுல.. நீ வந்து என்ன தீவச்சிக் கொழுத்துற மாதிரி ஒரு சம்பவம்!

காரியமில்லடா.. அப்படியே நாச்செத்தாலும் அந்த சாவுக்கு முன்ன இந்த தோட்டத்தில காமன் கூத்த எப்படியும் நடத்திக் காட்டிடணும். ஆனா அது நெறவேறுமா..?''என்றவர், "இது மாசி மாசம். ரெண்டு தோட்டத்துக்கு அப்பாலுள்ள தோட்டத்தில காமன் எரிக்கப் போறாங்களாம். இங்க பெரட்டுக்களத்தில வந்து நோட்டிஸ் ஒட்டிட்டுப் போறானுங்க. ஆனா இங்க...?''

பெருமூச்சு விட்டவர்.

"காமன் நட்டு அந்த கம்பத்தோட மன்மதன் படத்தையும் எரிச்சி எரிச்ச எடத்தில மண்ணு சூடு தணியிறதுக்குள்ள திண்ணையில இருந்து ஒரு பிடி உயிர்மண்ண யாருக்கும் தெரியாம எடுத்துக்கிட்டு ஒரே ஓட்டமா ஓடி வந்து சேர்ந்திடனுமின்னு எனக்கு வெறியா இருக்கு! இந்த வெறி தீயா உள்ளக் கெடந்து எரியுது'' ஒரு ஆவேசத்தோடு சொன்னார்.

அவரின் முகத்தையும் அதில் குடிக்கொண்டிருக்கும் வெறி தன்மையையும் கண்ட அழகர்சாமி தான் ஒருமுடிவுக்கு வந்தவனாய்....

" அண்ணே... நீ ஒண்ணும் இதுக்கு கவலப்படாதண்ணே... நம உயிர் மண்ணக் கொண்டு வர்றோம்.. கம்பம் நடுறோம்... ஊரே மெச்சிக்கிற அளவுக்கு காமன் கூத்த நடத்திக்காட்டத்தான் போறோம். நீ தைரியமா இரு. எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்!'' வீராப்போடு சொன்னான்.

நீ தைரியமாகவே இரு.''- ஒருவீராப்போடு சொன்னான்.

0

இரண்டு தோட்டங்களுக்கு அப்பால் உள்ள தோட்டத்தில் நடந்த காமன் கூத்தில் ரதியின் கணவன் மன்மதன் சிவப்பெருமான் மீதுபுஸ்ப பானம் விட்டதால் சினங்கொண்ட முக்கண்ணன் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்துவிட.......

"விட்டதோர் புஸ்ப பானம்

விமலபூபன் தன்னிடத்தில்

பட்டதோர் நெற்றி கண்ணால்

பரமன் நிழல் கலங்க

நெற்றிக்கண் திறக்கவே

கட்டழகனுடையாமல்-மதன்

கலங்கியே எரிந்து விட்டான்...''

கணவனை இழந்த ரதி புலம்புகின்றாள்...

அய்யய்யோ பாவிகளே

நான் கங்கானமெ கட்டு நேரம்

அய்யோ சாமி அல்லோ

எனக்கு மூத்தக்கால் ஊணும் நேரம்

அய்யோ சாமி...

முந்தாணி அவிந்திருச்சி

நான் நடந்து போகும் பாதையில

அய்யோ இன்னைக்கி

தாலியே கழன்றிச்சி...''

அழுது புரண்டு புலம்பும் ரதியானவள்... பின் எழுந்து கணவனுக்காக உயிர் பிச்சை வேண்டி தன்மடி ஏந்தி.. அந்த நடுசாமந்தன்னில்.. வீடு வீடாக.. போகிறாள். அவளுக்குப் பின்னால்... காமன் தப்பு ஓசையை எழுவுத்தப்பு ஓசையாக மாற்றியடிக்க பார்வையாளர்கள் மத்தியில ஆழ்ந்ததொரு சோகம். கூட்டம் ரதிக்குப் பின்னால் போகிறது. ஒரெ... சோகம். ரதிக்குப் பின்னால் கூட்டமே போகிறது.

சாமம் கடந்த நேரம்... ரதி கூட்டத்தோடு மேட்டு லயத்தை தாண்டி காட்டு லயத்துப்பக்கம் போய் விட்டாள்.

காமன் பொட்டல் திண்ணையில் காவலாய் இருந்தவர்கள் அமர்ந்தப்படியே கண்ணயர... தூரத்திலிருந்து ஒலிக்கும் சாவுத்தப்ப ஒரு துயர கீதமாக ஒலிக்கிறது.

பாதி உறக்கத்தில் இருந்த ஒருவன் திடீரென்று விழித்தெழுந்து "ஏய்..! யாரேத் திண்ணையில இருந்து உயிர் மண்ண எடுத்துக்கிட்டு ஓடுறானே..!''

என்று கத்த... திடுக்குற்று வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தவர்களும்... "வாங்கடா!... ஓடிப் பிடிங்கடா!

அந்த திருட்டு நாய்களை கொல்லாம.. விடக் கூடாது...!''

“ஏய் ..ஏய் ! அந்தா ஓடுறான்..!'' என்று அவர்கள் கத்தியவாறு.... கமபு. கத்தி... ஈட்டியோடு திருடனை துரத்திக் கொண்டு ஓட.... ;

அந்த இரவில் தேயிலைச் செடிகளுக்கூடே.. கானுக்கட்டை குறுக்குப்பாதை என்று முன்னால் ஓடுபவன் எங்கு ஓடுகிறான் என்றே தெரியாமல் அவர்கள் துரத்திக்கொண்டு ஓடினர்.

“ஏய் இந்தா இங்க... ஓடுறான்.!''

ஆளுக்கு முன்னால் ஓடிவந்தவன். தனக்கு முன்னால் ஓடும் கரிய உருவத்தைப் பார்த்து கத்தியவன்.... தன்கையிலிருந்த ஈட்டியை அந்த உருவத்தைநோக்கி எறிந்தான். அவனின் குறி தவறவில்லை. குத்துப் பட்ட அந்த உருவம் அடர்த்தியான தேயிலைச் செடிக்குள் புகுந்து வேதனனை அடக்கிக்கொண்டு அவர்களின் கண்ணில படாதவாறு மேடு பள்ளமென்று... சிறு பை நிறைந்த உயிர் மண்ணை நெஞ்சோடு அணைத்தவாறு...?

0

சங்குநாதனுக்கு உறக்கம் பிடிக்கவில்லை... கட்டலில் படுப்பதும் பின் எழுந்து உட்காருவதுமாக இருந்தார். அவருக்கு மனம் குழம்பியதுப்போல இருந்தது.

“அழகர்சாமி இப்ப வந்துடுவானா..? எந்த துணையும் எனக்கு வேணான்னு சொல்லிட்டுப் போனானே... அவனால அந்த காரியத்தை இந்நேரம் செஞ்சிருக்க முடியுமா?... ஒருவேள... அந்த ஆளுங்ககிட்ட அவன் பிடிப்பட்டிருந்தா?

சே.. ஏந்தம்பி தைரியமானவன் எதையும் வெண்டிட்டுதான் வருவான். மனதில் ஒரு உறுதியோடு இருந்தார்.

அதிக்காலை சேவல் கூவும் நேரம். கதவை தட்டும் ஓசை...

அவசரம் அவசரமாய் போய் கதவைத் திறந்தார் சங்குநாதன்.

“அண்ணே உயிர் மண்ண.. கொண்டு வந்திட்டேண்ணே... நீ இங்க காமன நட்டுவையி.... நீ மன்மதன் வேஷத்தக்கட்டு. ஆனா இப்ப காலம் கடந்துப் போச்சிண்ணே... இனி அடுத்த வருசம்தான்... அப்ப ஒன்ன... சிவன் எரிக்கமாட்டான். ஆனா... என்ன.. என்ன. இப்ப...'' தடுமாறி சொன்ன அழகர்சாமி...

ஒரு பை நிறைந்த மண்ணை சங்குநாதனிடம் கொடுத்த தோடு அவரின் காலடியில் அப்படியே விழுந்து விட்டான்.

அந்த வைகறை பொழுதில் கிழக்கு வானமும் அதன் அடிமட்ட செந்நிற கோடுகளும் கலந்த அந்த உதயத்தில் உயிர் மண்ணை தன்னிடம் தந்து விட்டு குருதிப் பெருக்க தன் தம்பி அழகர்சாமியை இப்போழுது நினைத்துப் பார்த்த சங்கநாதனின் கண்கள் கலங்கின...

“தம்பி ஒன்ன என்னையால மறக்க முடியுமாடா...'' வாய்விட்டு சொன்னவருக்கு. ஓ... வென்று அழ வேண்டும் போல இருந்தது. அவரை அறியாமலே அவர்

“ தம்பி...!'' என்று கதறிவிட்டார். இக்குரல்கேட்டு குசினியில் இருந்து ஓடி வந்த

தெய்வானை “அப்பா ஒங்க தம்பியை இப்பவும் நெனச்சிக்கிட்டிங்களா..? இவருத்தான்..செத்து.. தெய்வமாப்பொயிட்டாரே...'' என்ற தெய்வானையின் கண்கள் கலங்கின.

அதே நேரம்... தூரத்து லயத்திலிருந்து காமன் தப்பு ஒலித்துக்கொண்டிருந்தது...

தூரத்தில் ஒலித்த அந்த தப்போசையை கேட்க கேட்க சங்குநாதனின் உள்ளத்தில் ஒருபுதிய தெம்பு ஏற்பட்டது. “ஏந்தம்ப அழகர்சாமி செத்தப் பிறகு நட்டு வச்ச காமன் இன்னைக்கும் பிரகாசமா இங்க இருக்குது... இந்த காமன் கூத்து...

தோட்டமெங்கும் அழியாத கூத்தா என்னைக்கும் நெலைச்சி நிக்கும்...'' என்றவர் நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்தப்படி “மன்மதன் எரிஞ்சப்பெறகு ரதியோட கண்ணுக்கு மட்டும்தான் தெரிவான். ஆனா... இந்த காமன் கூத்து எல்லார் கண்களுக்கும் தெரியணும். இந்தக் கூத்த எல்லாரும் பார்க்கணும்!'' என்று சங்குநாதன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவரைத் தேடி வந்த இருவர் சங்குநாதனின் அருகில்வந்து

“ஐயா.. நாங்க பெரியாத்துக்கு அப்பால டவுனு தோட்டத்தில இருக்கோம். எங்கத் தோட்டத்திலேயும் காமன் கூத்து வைக்க எங்களுக்கும் ஆச இருக்கு. அதுக்கு ஒங்க ஒதவி தேவ...''என்றார் சற்று வயதான ஒருவர்.

“சொல்லுங்க... அப்படி என்னா ஒதவி வேணும்?'' என்று கேட்டார் சங்குநாதன்.

“காமனை நட்டு வைக்க ஒங்கத் தோட்டத்தில இருந்துதான் எங்களுக்கு உயிர்மண் வேணும்... மறுக்காமத் தருவீங்களா?'' என்று வயதானவருக்குப் பக்கத்தில் நின்ற இளைஞன் கேட்டதும், தன்தம்பியின் கவலையைக்கூட விட்டுவிட்டு அந்த இளைஞனை மகிழ்ச்சியோடு பார்த்த சங்குநாதன்... “தம்பி நீ சொல்லுறதப் பார்த்தா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஆனா... இங்கிருந்து உயிர் மண்ண கொண்டுப் போறது அப்படி ஒண்ணும் சாதாரண விசயமில்ல. இந்த உயிர் மண்ணுக்காக... நான் என் தம்பியையே பலிக்கொடுத்திருக்கேன். அப்படி ஒரு நெலம்ம ஏற்படவேக்கூடாது'' என்றவர்... “நீங்க காமன எரிக்கிற அன்னிக்கி வந்து உயிர் மண்ணக் கொண்டுப் போங்க.

அதுக்கு எந்தக் கட்டுப்பாடே தடையோ இல்ல. நீங்க ஒங்கத் தோட்டத்திலேயும் காமன் கூத்த சிறப்பா நடத்தணும் இதுதான் என்னோட ஆசை''

பெருமிதத்தோடு சென்னார் சங்குநாதன்.

0

பெரட்டுக்களம் ஆகஸ்ட்-2015

-மல்லிகை சி. குமார் எழுதிய சிறுகதை அவரது ஓராண்டு நினைவாக .

○

# நான் என்ன நரியா?

நா. நவராஜ்



நான் என்ன நரியா? என்னைப் பார்க்க நரிபோலே இருக்கிறதா? எனக்கேட்டபடி அந்த இளைஞன் நிலத்தை நோக்கித் தன்பார்வையைச் செலுத்தினான். கோபத்தால் அவனது உடல் படபடத்துக் கொண்டிருந்தது. அப்பா சொல்கிறார், அம்மா சொல்கிறா, அண்ணா சொல்கிறார், எல்லோருமே அப்படித்தான் சொல்கிறார்கள். ஏன் நண்பர்கள் கூட அப்படிச் சொல்லித்தான் சிரிக்கினம். நான் என்ன குள்ளனா, வஞ்சனை பொருந்தியவனா எதுக்காக அப்படிச் சொல்லவேணும் என்று தொடர்ந்தவன் அழத்தொடங்கினான். பாடசாலைக்கோ ரீயூசனுக்கோ செல்லப்போவதில்லை. இனிப் படிக்கப்போவதேயில்லை என முடிவெடுத்தான். பெற்றோர் அதிர்ச்சியுற்றனர். 'நரி' என்ற ஒரு சொல் அவன் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது.

'பட்டம் சூட்டுதல்' தமிழர்களாகிய எம்வாழ்வோடு ஒன்றிப்போய் மரபணுக்களில் ஊறி இருக்கிறதுபோலும். பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பட்டங்களுக்கு அப்பால் நாம் பல பட்டங்களைத் தாங்கி நிற்கின்றோம். நமக்கு நாமே அதனை இட்டும் கொள்கின்றோம். சங்ககாலம் தொடங்கி அரசர்களில், புலவர்களில் தனது செல்வாக்கைச் செலுத்தி வந்த பட்டம் இன்றும் அரசியல்வாதிகள், நடிகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் முதல் சாதாரண மக்கள் வரை தனது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. இந்தப் பட்டம் பெறும் ஆசை பின்தள்ள பலபல காரியங்களில் பலர் ஈடுபடுகின்றனர். அல்லது ஈடுபட்டுவிட்டுப் பட்டம் வரும் என்று காத்திருக்கின்றனர். தாமே தம்மைப் பற்றி எழுதி விண்ணப்பிக்கின்றனர். சிலர் பெற்ற பட்டங்களுக்கு அமையத் தம்மை தகுதியானவராக மாற்றுவதற்குச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர் யாரும் தமக்குத் தரப்பட்ட பட்டத்தினை ஒருவர் சொல்லி அழைக்கின்றபோது எரிந்து விழுவதோ, கோபப்படுவதோ வெட்கப்படுவதோ இல்லை. (அழைக்காதபோது சிலவேளைகளில் இவ்வுணர்வுகள் வரலாம்) பெருமைப்படுகின்றனர். அவர்களால் அப்பட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருப்பதால் எதிர்மறையான உணர்வுகளுக்கு அவர்கள் உட்படுவதில்லை.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இடையில் பட்டங்கள் ஒருவரைப் பெருமைப்படுத்துவதற்கு மாறாகச் சிறுமைப்படுத்தவும் எரிச்சலூட்டவும் பயன்படுத்தப்படுகின்றன. (சில பெரியவர்களுக்கு இடையிலும் இப்பழக்கம் உண்டு). சில பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்குப் பட்டங்களைச் சூட்டி அவர்களைக் கிண்டல் பண்ணுகின்றனர். அவ்வாறு செய்வதால் அவர்களுக்கு ஏற்படும் மனஉளைச்சல்களைப் பற்றி அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. நாம் சும்மா பகிடிக்குத்தானே அவ்வாறு செய்கின்றோம் என்று சொல்வார்கள். இப்படிப்பட்ட ஒரு மனநிலை கொண்ட பெற்றோரிடையிலேயே மேலே சொல்லப்பட்ட இளைஞர் வளர்ந்தார். அவரது ஒட்டியிருக்கும் அடிவயிறோடு கூடிய உடல் அமைப்பினைக் கொண்டே அவர்கள் 'நரி' என்ற செல்லப் பெயரினை (பெற்றோரின் கருத்துப்படி) வழங்கியிருந்தனர். சிறுவயதில் இருந்தே இது வழக்கில் இருந்தது. விபரம் தெரியவந்த போது சிறுவர்கள் நீதிக் கதைகளில் வரும் 'நரி' போல் வஞ்சனை, குள்ளத்தனம் கொண்டவனாகத்தான் இருக்கின்றேனா? எனச் சிந்திக்கத் தொடங்கினார். அவரால் இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முரண்பட்டார். மற்றவர்களுக்குமுன் வருவதற்கு அஞ்சினார். தனது உருவமே அவருக்கு வெறுப்பைத்தந்தது. இந்நிலைக்கு உட்படுத்திய பெற்றோரைப் பழிவாங்க படிப்பை நிறுத்தி விட்டார்.

'மனிதன் சம்பவங்களால் குழப்பப்படுவதில்லை. அவனது சிந்தனைகளே அவனைக் குழப்பி விடுகின்றன' என அறிகைசார் சிகிச்சையாளர்கள் குறிப்பிடுவர். 'நரி' என்ற சொல் அது பற்றி அவர் கொண்டிருந்த வஞ்சகமானது, குள்ளத்தனமானது என்ற எதிரான சிந்தனைகள் அவரை எதிரான மனநிலைக்கு உள்ளாக்கி தாழ்வுச்சிக்கலுக்குள் இட்டுச்சென்றது. வாழ்வு சிக்கலானது.

இன்னொரு இளைஞன் அவனை நண்பர்கள் இப்படித்தான் 'நரி' என்று அழைத்தனர். நண்பர்களோடு இரவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்றாகக் கூடி நின்று குதூகலிப்பது அவனது வழக்கம். அவ்வேளைகளில் எல்லாம் அவர்கள் அவனை 'நரி' என அழைத்துச் சினமூட்டினர். அவன் தனக்குள் நினைத்தான் 'நரி' தந்திரமுள்ளது. நானும் இவர்களைத் தந்திரத்தால் வெல்லவேண்டும் என்று. தெருவில் இருந்து வீடு வந்ததும் தனது படிப்பில் மும்மரமாக ஈடுபட்டான். க.பொ.த உயர்தரப் பரீட்சை வந்தது. அவர்கள் குழு தெருவில் நின்று குதூகலித்தது. இவனும் நின்றான். நரி என்ற நாமத்தோடு. இரவில் படிப்புத்தொடர்ந்தது. தந்திரமாக. பரீட்சை முடிந்தது. முடிவுகள் வந்தன. தெருவில் இவரோடு நின்றவர்கள் அத்தனை பேருள்ளும் இவன் மட்டும் பல்கலைக்கழகம் தெரிவானான். எப்படியடா? என்றனர் மற்றவர்கள். அவன் சொன்னான் 'நரி' தந்திரமானது என்று.

'நரி' என்ற ஒரு பட்டம் இரு இளைஞர்கள் அதனைப் பார்த்த விதத்தால் அவர்கள் வாழ்க்கை இருநிலைப்பட்ட முடிவிற்குள் தள்ளப்பட்டுள்ளது. ஒரு சம்பவத்தில் உள்ள எதிரான விடயத்தைப் பார்ப்பதில் தப்பில்லை. அதை எம்மோடு பொருத்தி நாம் அந்தவாறே இருக்கின்றோம். என நம்பி அதனை மீள மீள வலுவாக்கி எம்மைப் பிழையான வழிக்கு நாமே இட்டுச்செல்வது சரியானதா என நாம் சிந்திக்க வேண்டும். தம்மைப் பற்றித் தாழ்வாகச் சிந்திப்பவர்களும் எந்தவிடயத்தையும் தமக்கு எதிரானதாகப் பார்ப்பவர்களும் இம் மனநிலைக்குள் சடுதியாக விழுந்து விடுகின்றார்கள். குறித்த அந்தச் சொல்லை (நரி) தான் கற்பித்த எதிரான காரணத்தினால் (குள்ளத்தனம், வஞ்சனை) ஏற்கவோ அல்லது இயல்பாக எடுக்கவோ முடியாமல் அதனை மறுதலிக்கின்றார். இவ்வேளையில் மற்றவர்கள் அதனைத் திரும்பத் திரும்பச் சொல்கின்றபோது சினமூட்டப்பட்டு எரிச்சல் அடைகின்றார். கோபம் உறுகின்றார். மற்றவர்களோடு முரண்படுகின்றார். இதன் மூலம் எமது இயல்புநிலையைக் குழப்பி எம்மை சினமூட்டி அமைதியற்றவர்களாகச் செய்து ரசிக்க நினைக்கும் மற்றவர்களின் இச்செயலுக்கு நாமே வழியமைத்துக் கொடுத்து விடுகின்றோம். அவர்கள் அச்சொல்லையே எமக்குப் பட்டமாகச் சூட்டிவிடுகின்றனர். ஏற்காத இச்சொல் பட்டமாகின்றபோது அது மனதுக்குப் பெருமை அளிப்பதில்லை. மாறாக எமது வாழ்க்கையையே நரகமாக்கி விடுகின்றது. மற்றைய இளைஞர் நரி தந்திரம் மிக்கது என்றபார்வையில் அதனை அணுகினார். அந்தக் குணத்தைத் தனக்குச் சார்பாக மாற்றினார். மற்றவருக்கும் தீங்கிழைக்காமல் தனக்கும் தீங்கில்லாமல் அதனைக் கையாண்டு வெற்றியும் பெற்றார். வேப்பம் பூ கசப்பானது என்பது ஒரு பார்வை. அதற்குள்ளும் தேன் இருக்கின்றது எனப்பார்ப்பது இன்னொரு பார்வை. உங்கள் பார்வை எப்படி? கசப்பானதா. இனிப்பானதா.

மாணவர் வாசிப்பனுபவம் :

மாஸ்டர் சிவலிங்கம் எழுதிய சிறுவர் கதை மலர் பாகம்2

# சிறுவர் கதை மலரும் அனுபவப்பகிர்வும்






மாதவி உமாசுதசர்மா

எப்போதும் மனிதர்களின் நடத்தையில் அவர்களின் சுற்றுப்புறசூழல், சக மனிதர்களின் தாக்கம் இருந்து கொண்டே இருப்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் அவர்களின் உள நடத்தையில் பெரும்பாலும் அவர்களை பாதித்த விடயங்கள் தாக்கம் செலுத்தும் என்பதை அனேகர் அறிவதில்லை. அந்தப் பாதிப்பு நல்ல விடயமா அல்லது தீமை பயக்கும் விடயமா என்பதைப் பொறுத்தே ஒருவரின் குணாதிசயங்கள் அமைகின்றன. அந்த வகையில் புத்தகங்களின் பாதிப்பு என் போன்ற "புத்தகப் பூச்சிகள்" என சமூகத்தில் விளிக்கும் பலரிலும் அதிகமாகவே காணப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.

என்னை மிகவும் பாதித்த புத்தகம் எனில் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் சிறுவர் கதைமலர் (பாகம் 2) புத்தகத்தை குறிப்பிடுவேன். இதற்கு பல காரணங்கள் உண்டு. 2005 காலப்பகுதியில் நான் ஆரம்பப்பாடசாலையில் கற்றுக்கொண்டிருந்த போது எனக்கு நண்பர்கள் மூலமாக சிறுவர் கதைப் புத்தகங்கள், விஜய் சிறுவர் பத்திரிகை போன்றன அறிமுகமாயின. அதுவே எனக்கு நினைவிலுள்ள பாடநூல்கள் தவிர்ந்த எனது முதல் புத்தகப் பிரவேசம் என நினைக்கின்றேன். அப்போது அறிமுகமானது தான் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் சிறுவர் கதை மலர். அந்தப் புத்தகத்தை வாசித்து முடித்து விட்டு அம்மாவிடம் அந்தப் புத்தகத்தை வாங்கித்தரும்படி கேட்டேன். அம்மா உடனே வாங்கித்தந்து இருந்தால் இப்போது இந்த விமர்சனத்தை நான் நிச்சயம் எழுதியிருக்க முடியாது. அடுத்த தவணைப் பரீட்சையில் சென்ற முறையை விட அதிக புள்ளிகள் பெற்றால் வாங்கித்தருவதாக கூறிவிட்டார். கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் அந்தப் புத்தகத்தை பெற்றுக்கொண்டேன். சிறிது காலம் சென்ற பிறகு நான் ஒரு இலக்கை அடைவதற்கு, அதற்கான உரிய முயற்சியையும், கடின உழைப்பையும் செய்தால் மட்டுமே வாழ்க்கையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை புரிந்து கொண்டேன்.

கதைகளின் மீதான எனது காதல் இவ்வாறுதான் ஆரம்பமானது. சிறுவர்களுக்கு எப்போதும் மந்திர தந்திரக்கதைகள் மீதும், அரசக்கதைகள் மீதும் ஆர்வம் இருக்கும், இதற்கு நானும் விதிவிலக்கு அல்லவே. மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் மந்திர கதைகள் என்னை ஆட்கொள்ளத் தொடங்கின. மாஸ்டர் சிவலிங்கம் என அழைக்கப்படும் இரத்தினம் சிவலிங்கம் ஈழத்தின் சிறுவர் எழுத்தாளரும், பேச்சாளரும் ஆவார். கவிதை, சிறுவர் கதை, சிறுவர் பாடல்கள், வில்லுப்பாட்டு, நகைச்சுவைப் பேச்சு, நாடகம் எனப் பல துறைகளிலும் சிறப்புப் பெற்றவர். இவரது நூல்கள் பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, உறைபனித் தாத்தா, சிறுவர் கதை மலர் என்பன. மேலும் இலங்கை அரசின் சிறுவர் இலக்கியத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர் என்பதும் குறிப்பித்தக்க விடயம்.

சிறுவர் கதை மலர் பாகம் இரண்டில் ஐந்து கதைகள். மந்திரக்கண்ணாடி கதையில் வரும் வெண்பனியாள், ராணி ஆகிய இருவரும் அற்புதமான அழகிகள். ஆயினும் வளர்ப்பு மகள் தன்னை விட அதிக அழகை கொண்டிருந்ததால் பொறாமைப்பட்ட ராணி அவளை கொல்ல முயல்கையில் காப்பாற்றும் ஏழு சித்திரக்குள்ளர்கள், மந்திரக்கண்ணாடி, இளவரசன் என்று கதை முழுவதும் மந்திரங்கள் நிறைந்தது. இக்கதையின் ஊடாக ஆசிரியர் சொல்ல வரும் கருத்து நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பதாகும். மேலும் யாரென்றே தெரியாத பெண்ணிடம் கூட அன்பு செலுத்தும் மனிதர்களின் உயர்ந்த குணத்தை சிறுவர்களுக்கும் போதிக்கிறார். தங்க முடி நங்கை கதையில் இறைநம்பிக்கை மற்றும் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற கருத்தை ஆழமாக வலியுறுத்தும் வகையில் கதைக்கருவைப் படைத்துள்ளார். பறக்கும் ரொட்டி கதையில் நமக்கு ஜப்பான் நாட்டில் குகைகள், விசிறிகள், சீக்கிய மதத்தவரின் கடவுள் சிலை, கிராம வாழ்க்கை என்பவற்றை அறிமுகம் செய்கிறார். மேலும் பொறாமைக்குணம் நம்மை அழிக்கும் என்பதையும் சிறுவர்களுக்கு மனதில் பதியும்படி கதை வழி காட்சியமைக்கின்றார்.

சிறுவர்கள் மத்தியில் பீர்பால், தென்னாலிராமன் பிரபல்யமானவர்கள். அவர்களைப் போல பிரபல்யம் அடையாத ஆனால் நகைச்சுவை மன்னனான துருக்கி நாட்டவரான நஸ்ருதீன் கோஜாவின் கதை தான் 'வெற்றி யாருக்கு?' வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பத்திலும் வெற்றிபெற்றே தீருவேன் என்ற பிடிவாதக்குணம் உடையவர்களுக்கு பாடமாகும் கதை. வாழ்க்கையில் விட்டுக்கொடுக்கும் குணத்தின் அவசியம் பற்றி கதை மாந்தர்கள் ஊடாக நமக்கு வழிகாட்டுகின்றார். 'பலே பேர் வழி' கதை ஊடாக ஏமாற்றினால் ஏமாற்றமே நேரும் என்பதும், அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படுதல் தவறாகும் என்பதும் புலனாகின்றது.

தொடர்ந்த என் வாசிப்பில் புதிர்க்கதைகளில் வரும் கேள்வி, பதில்களில் தெரியும் பீர்பாலின் சாமர்த்தியத்தை வியப்பது, விக்கிரமாதித்தன் கதைகளில் வேதாளத்தின் விடை தெரியா கதைகளுக்கு பதில் கூறும் புத்திசாலித்தனத்தை நானும் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது, மஹாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக் கதைககளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பது முதல் பொன்னியின் செல்வனில் வரும் வந்தியத்தேவனோடு குதிரையில் நானும் பயணப்படுவது, செங்கை ஆழியனின் கதைகளை புரிந்து கொள்ள முற்படுவது, கவிஞர் முருகையனின் கவிதைகளில்

உள்ள மரபுத் தமிழை கற்றுக்கொள்வது, பியோதார் தாஸ்தோவ்ஸ்கியின் வெண்ணிற இரவுகளில் நனவிடை தோய்தல், புரட்சி நாயகன் சேகுவேராவின் கமியூனிசத்தை அறிந்து கொள்வது, காந்தியடிகளின் சுதந்திரப்போராட்டத்தை படிப்பது, கோகிலா மகேந்திரனின் நேர் கொண்ட பாவையாய் வாழ முயற்சிப்பது வரை என் அனைத்து வாழ்க்கைப் படிகளும் புத்தகங்களாலும், கதை மாந்தர்களாலும், புரட்சி நாயகர்களாலும் நிரம்பப் பெற்றது.

ஆனால் எப்போதும் என்னை பாதித்த நூல்களில் முதன்மையானது மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் சிறுவர் கதை மலரே. ஏனெனில் வெண்பனியாள், தாங்கமுடி நங்கை எனக்கு வெவ்வேறு கதைகளில் வெவ்வேறு கதாநாயகியாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் காட்சி தருகின்றனர். நஸ்ருதீனையே நான் தென்னாலிராமனாகவும், சார்லிசாப்ளின் ஆகவும், இன்னும் வெவ்வேறு இடங்களில் வாழ்வில் கஷ்டங்களை நகைச்சுவையால் எதிர்கொண்டு வாழும் மனிதர்களிலும் காண்கின்றேன். வாழ்க்கையில் பறக்கும் ரொட்டியைப் போலவே சிலருக்கு வாய்ப்புகள் அமைகின்றன. சிலர் அதை தக்க வைத்துக்கொள்கின்றனர். சிலர் அதை தவற விடுகின்றனர். இப்படி ஒவ்வொரு கதையில் இருந்தும் ஒவ்வொருவர் என்னை பாதித்து விட்டார்கள். இது சற்று மிகைப்படுத்தப்பட்டது போலத் தோன்றினாலும் எனது அனுபவத்தையே இங்கு பகிர்கிறேன்.

இந்த நூலில் உள்ள குறைபாடு என நான் கருதுவது, மந்திர தந்திரக்கதைகள் மட்டுமே கதைக் களமாக்கப்பட்டுள்ளது. இதனால் சிறுவர்களிடத்தில் தர்க்க ரீதியான சிந்தனைகள் வலுப்பெறுவதை சற்று குறைக்கலாம். இதனை பெற்றோரிடம் சிறுவர்கள் வினவும் போது பொறுமையாகப் பதில் சொல்வதன் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்யலாம். மேலும் நம் நாட்டின் சூழல்களையும் அறிமுகப்படுத்தி இருக்கலாம்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். அது போலவே சிறுவர்களிடத்தில் நாம் நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொள்ள உதவியாய் இருக்க வேண்டும். அந்த சமூகக் கடமையை மிகவும் நேர்த்தியாய் நிறைவேற்ற இந்த நூல் உதவியாய் அமையும் என்பதில் ஐயம் இல்லை. மேலும் பிற நாடுகளுடன் ஒப்பிடும் நம் நாட்டில் சிறுவர் இலக்கியங்கள் ஆக்கப்படுவதும், வெளிவருவதும் குறைவே. பெரும்பாலான பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவர்களின் உளநலத்தில் கவனம் எடுப்பதும் இல்லை. இதனால் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அவர்கள் காட்டும் ஆர்வம் மிகவும் குறைவாகவே உள்ளது. தனியே பரீட்சைகளில் புள்ளிகளை பெறுவதும், நல்ல வேலையில் அமர்ந்து சமூக அந்தஸ்த்தைப் பெறுவதுமே பெரும்பாலானோரின் இலட்சியமாக உள்ளமை வருந்தத்தக்க விடயமே. சமூகச் சூழலில் கதை மலர்களில் அல்லது வாசிப்பில் ஆர்வமாய் உள்ள சிறுவர்களை புத்தகப்புழு, புத்தகப்பூச்சி என கேலி செய்வதன் மூலம் அவர்களின் ஆர்வத்தை முடக்குகின்றோம். மேலும் ஒரு கதைப்புத்தகம் வாசிக்கும் நேரத்தில், பயிற்சிப்புத்தகத்தை அல்லது பாடநூலைப் படிக்கலாமே என இன்றும் வினவுகின்றோம் என்பது வேதனைக்குரியது. வாசிப்பை திணிக்காமல் ஆர்வத்தை தூண்டுவதன் மூலம் உலகை புத்தகத்தின் கண் கொண்டு அறியவைக்க முடியும் என்பது எனது கருத்து.

வாசிப்பை போல ஒரு சிறந்த பழக்கமும் இல்லை. நூல்களைப் போல சிறந்த நண்பர்களும் இல்லை.

---

# இளமை திரும்பாதோ?

*அன்னையும் தந்தையும் அரவணைத்து வளர்த்த,*
*அந்நாள் ஞாபகம் மூடுபனிக் காட்சிகளாக,*
*அகமதில் தோன்றியதால் இந்த நாள்*
*அல்லலின் அருமருந்தாய் வலிகளைப் போக்கியதே!*

*அம்மாவின் உருவத்தில் அனைத்தையும் உணர்ந்து*
*அன்பின் இலக்கணத்தை அகமதில் பெற்று,*
*அப்பாவின் ஆதரவில் நெஞ்சில் உரமாகி,*
*அகிலம் வென்றிடும் வரமது பெற்றேனே!*

*அக்காவும் அண்ணாவும் சிந்தையின் முன்னோடிகளாக,*
*அறிவையும் ஆற்றலையும் அடைந்திட வழிகாட்டிய*
*சற்குருக்களாக ஒன்றாக வாழ்ந்த பொழுதுகளில்*
*சகோதரனில் பாச மழை பொழிந்தனரே!*

*தங்கையும் தம்பியும் சீடர்களின் பணிவுடன்*
*தங்களின் சந்தேகங்கள் விளக்கங்களில் போக்கி*
*பரிசுகளை பாசத்தைப் போட்டியாகப் பகிர்ந்து*
*பரவசமான இளமைக்காலம் மீண்டும் திரும்பாதோ?*



தெய்வமதி

# ABD ENGINEERING

J/DS/03/BR/1862/2020

ENGINEERING

We take a closer look

ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் உங்கள் வீட்டில் சகல வித எலக்ரிக் வேலையும் செய்துதரப்படும்.

**சேவைகள்**

பிழம்பிங் , எலக்ரிகல் வயறிங் பழுது பார்தல்

**விற்பனை , திருத்த வேலைகள்**

- ப்ரிஜ்
- ஏ/சி
- மோட்டர்
- கணனி
- லப்டோப்
- பிறிண்டர்
- போட்டோக்கொப்பி இயந்திரம்
- வாஷிங் மெசின்

**பொருத்து வேலைகள்**

- CCTV கமரா
- ஏ/சி
- சோலார்
- நெட்வெர்க்

abdengine@gmail.com



இல 45, சின்னக்கடை கிழக்கு, யாழ்ப்பாணம்.

076 7094 058    021 4372 800



# CITY MEDICAL CARE
## சிற்றி மெடிக்கல் கெயார்

CITY MEDICALS
SINCE 1978
FAMILY PHARMACY




சிற்றிமெடிக்கல் மற்றும் சிற்றி மெடிக்கல் கெயார் ஆகிய எமது நிறுவனங்களின் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் பொருட்களுக்கான காட்சியறை மேலும் புதுப்பொலிவுடன் வாடிக்கையாளர்களுக்கு தரமான பொருட்களை நியாயமானவிலையில் வழங்கி வருவதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்

**CITY MEDICALS**
#487 HOSPITAL ROAD, JAFFNA.
+94 76 248 8025
+94 21 222 7693

**CITY MEDICAL CARE (PVT) LTD.**
#558A HOSPITAL ROAD, JAFFNA.
+94 77 661 2058
+94 21 221 7661

**CITY MEDICALS**
#6 STATION ROAD, CHAVAKACHCHERI, JAFFNA.
+94 76 026 0991
+94 21 227 1787

# Sentha
## Watch Service Center

Watch Repaires and Dealers in Wall Clock Batteries
Belts & New Model Watch ect



**0773363007**

Jaffna Road , Manipay




இச்சஞ்சிகை மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கைக்காக செருக்கற்புலம், சுழிபுரம் எனும் முகவரியில் வசிக்கும் அழ. பகீரதன் அவர்களால் பெப்ரவரி 2021 இல் சில்லாலை வீதி, பண்டத்தரிப்பிலுள்ள ஜே. எஸ். பிறின்டேஸ் இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது